# தமிழ் நாடு தீ விபத்தில் 100 குடிசைகள் நாசம


Registered as a News paper in Ceylon விலை சதம் 15

# ஈழநாடு

EELANADU

National Tamil Daily

தேசிய தினசரி

தபால்பெட்டி எண்: 49

போன்: 389

மலர் 11

இதழ்:152

யாழ்ப்பாணம் ஆனி 30 ரபி. ஆகி 28 திங்கட்கிழமை [14-7-69]



பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்



டொலர் கோர்ப்பரேஷன்


சென்னை, ஜூலை 13

புலிப்பட்டி என்ற இடத்தில் ஏற்பட்ட தீவிபத்தில் சுமார் நூறு குடிசைகள் எரிந்து சாம்பலாகின.

இந்த விபத்தில் எவரும் காயமடைந்ததாகத் தெரியவில்லை. ஆனால் சுமார் 23 ஆயிரம் ரூபாய்வரை நஷ்டம் ஏற்பட்டிருக்கலாம என்று கருதப்படுகின்றது நூற்றுக்கணக்கான ஏழைகள் வீடுகளை இழந்துள்ளனர் இதில் நாசவேலைகள் இடம்பெற்றிருக்கலாம் என்று பொலிசார் கருதுகின்றனர். பொலிஸ் கோஷ்டியொன்று ஸ்தலத்துக்கு விரைந்து புலன்விசாரணைகள் நடத்திவருகின்றது

சமீபகாலத்தில் நடந்த மிகமோசமான தீவிபத்து இது என்று கூறப்படுகின்றது. இதேபோல் முன்னரும் பலதடவைகள் இம் மாதிரி திடீர் திடீரென்று தீவிபத்துகள் ஏற்பட்டு ஏராளமான குடிசைகள் நாசமாக்கப்பட்டன. ஏராளமான மக்கள் கஷ்டங்களுக்குள்ளானார்கள். இவர்களில் பலருக்கும் அரசாங்கம் குறைந்த செலவில் வீடுகட்டிக்கொடுத்தது.

# நாவலர் ஆக்கிய நூல்களை ஒன்றுக்கி வெளியிட முயற்சி

## தமிழாராய்ச்சி மகாநாட்டை நடத்தவும் விழாக்குழு தயார்

யாழ்ப்பாணம், திங்கள்

**நாவலர் பெருமான் எழுதிவெளியிட்ட சகல நூல்களையும் ஒன்று திரட்டி ஒரே முழு நூலாக வெளியிட நாவலர் மகாநாட்டு குழுத் தலைவரான மெய்கண்டான் அதிபர் திரு. நா. இரத்தினசபாபதி முயற்சி மேற்கொண்டுள்ளார்.**

நாவலர் மகாநாடு சிறப்பாக நடைபெற்றதை முன்னிட்டு நேற்றுமுன்தினமிரவு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தேநீர்விருந்து வைபவத்தில் நாவலர் நூல் கண்காட்சிக்கு பொறுப்பாக இருந்த திரு. சொக்கனால் விடுக்கப்பட்ட வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட திரு. இரத்தினசபாபதி இவ்வித உறுதியை அளித்தார்.

திரு சொக்கன் இங்கு பேசும்போது தெரிவித்ததாவது:

### தைமாதத்துக்கு முன்வெளியாகும்

நாவலர் எழுதி வெளியிட்ட நூல்களைத்திரட்டித் தந்தால் அடுத்த தைமாதத்துக்குள் தாம் நாவலர் நூல்களை ஒரு முழு நூலாகவெளியிடுவதாக திரு. இரத்தினசபாபதி நமது நிருபரிடம் தெரிவித்தா.

உள்நாட்டு இறைவரித் திணைக்கள உதவி ஆணையாளர் திரு. [illegible] தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் [illegible]

கையில் கூறியதாவது:

நாவலர் சிலையினர் வடித்தெடுத்த சிலை நாவலருக்குச் செய்தகைமாறைவிட வருங்காலச் சிறுருக்குச் செய்த தொண்டே பெரியதாக இருக்கிறது. நமது பாரம்பரியத்தை நமது மூதாதையரை நமது முன்னோடிகளை மறந்துவாழ்ந்துவிடும் இளைஞர் மத்தியில் நாவலர் சிலை ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்திவிட்டது

[illegible] ளர்கள் பரம்திலலை [illegible] சு. பரநிருபசிங்கம், உடுவில் கிராம சபைத் தலை [illegible]

## யாழ்ப்பாணத்தில் பெண்களுக்கு நீச்சல் பயிற்சி

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணத்தில் நீச்சல் பயிற்சி அளிப்பதற்காக இங்கு வந்துள்ள ஜெர்மன் குடியரசு. பயிற்சியாளர் திரு. றெயினர் பிராங்க் கீரிமலையில் இம்மாதம்11-ம் திகதியிலிருந்து பயிற்சியளித்துக்கொண்டிருக்கிறார். இவர் வரும் 17-ந் திகதி வரை பயிற்சியளிப்பார்.

14-ந் திகதி பெண்களுக்கு மட்டும் பயிற்சியளிக்கப்படும்.

நீச்சல் நுட்பங்கள் பற்றிய இவரது ஆங்கில விளக்கங்களை நெடுந்தீவு விளையாட்டுத்துறை அதிகாரி திரு. என். எஸ். முருகேசு தமிழில் மொழிபெயர்த்து செய்கை முறைகளை விளக்கி உதவியாளராகப் பணியாற்றிவருகிறார்.

நீச்சல்வீரர்களை ஒழுங்குபடுத்துவதற்கும் கீரிமலைநீச்சல் தடாகத்தை நீச்சல்

### றிமாண்டில்

வல்வெட்டித்துறை, ஞாயிறு

கடந்தவாரம் உடுப்பிட்டியில் இருசாரார்களுக்கிடையே நடைபெற்ற சச்சரவைத் தொடர்ந்து பயங்கர ஆயுதங்களை வைத்திருந்ததாக உடுப்பிட்டியைச் சேர்ந்த கதிரவேலு என்பவரை வல்வெட்டித்துறைப் பொலிசார் கைசெய்து பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்கினராசா முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது மாஜிஸ்திரேட் எதிரியை இம்மாதம் 20-ந் திகதிவரை றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார். இதுசம்பந்தமாக பொலிசார் இன்னும் 6பேரைத் தேடிவருகின்றனர்.

## கல்வி நூற்றாண்டுப் பொருட்காட்சி

உரும்பராய், ஞாயிறு

'மாணவர்கள் கற்கும் கல்வி அவர்களின் எதிர்கால வாழ்வுக்கு சிறந்த அத்திபாரமாக அமையவேண்டும். மாணவர்கள் தாமாகவே சாதனை செய்து கற்றுக்கொள்ளுவதினால் பிறநாடுகளைப்போல வாழ்க்கையில் முன்னேற முடியும்' என கல்வி நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கோப்பாய் சரவணபவானந்த வித்தியாசாலையில் நடைபெற்ற பொருட்காட்சி விழாவை ஆரம்பித்து வைத்துப்பேசிய கோப்பாய் வட்டாரக்கல்வி அதிகாரி திரு. வே. சண்முகநாதன் மேற்கண்டவாறு கூறினார்-

ஆசிரியசங்கப் பிரமுகர்கள் ஆசிரியர்கள், பெற்றோர்கள் மாணவர்கள் உட்பட ஆயிரத்துக்குமதிகமானோர் பொருட்காட்சியைக் கண்டு களித்தனர்.

## "மதபோதனை வாழ்வுக்கு பயன்பட வேண்டும்"

பருத்தித்துறை, ஞாயிறு

'மனிதகுல நல்வாழ்வுக்காக உயிர்துறந்த யேசுவின் போதனைகள் எழுத்தளவிலும் பேச்சளவிலும் நிற்காது. வாழ்வுக்குப் பயன்படுமானால் பல சிக்கலான தேசியப் பிரச்னைகளையும் சர்வதேசப் பிரச்னைகளையும் தீர்க்க முடியும். 'உன்னைப் போல் உன் அயலவனையும் நேசி' என்ற உயர்ந்த கோட்பாட்டை கிறீஸ்தவர் மட்டுமன்றி அனைவரும் கடைப்பிடித்தல் வரவேற்கத்தக்கது.

இவ்வாறு கரவெட்டி அர்ச். அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்றுவரும் ஞான ஒடுக்கத்தின்போது வண. குரவர் பி. யேசுநேசன் கூறினார்.

## உரிமைப் போராட்டத்தை விரிவுபடுத்த அறைகூவல்

### சீனசார்பு கம்யூனிஸ்ட்கட்சி அறிக்கை

யாழ்ப்பாணம், திங்கள்

வடபகுதியிலுள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் யாவரையும் முற்போக்கு எண்ணம் கொண்ட மக்கள் அனைவரையும், சாதி ஒடுக்குமுறைக்கும், தீண்டாமைக்கும் எதிரான போராட்டத்தை விரிவுபடுத்தும்படி அறைகூவி அழைப்பதுடன், அரசாங்க அதிகாரிகளினதும் பொலிசாரினதும் போலி வாக்குறுதிகளுக்கும் ஏமாற்றுகளுக்கும் இடம் கொடுக்காதிருக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

இலங்கை — சீனசார்பு கம்யூனிஸ்ட் கட்சி பொதுச் செயலாளர் திரு. என். சண்முகதாசனும், வடபிரதேச கமிட்டிச் செயலாளர் திரு. வி. ஏ. கந்தசாமியும் கூட்டாகச் சேர்ந்து வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:- சாதி அடக்குமுறையும் தீண்டாமையும் தேவையற்ற, அநாகரிகமான, பழமையான ஒரு பழக்கவழக்கம் என்பது எமது கட்சியின் நம்பிக்கை ஆதலால் இதனை ஒழித்துக்கட்டுவதற்கு நாம் உறுதியுடன் போராடவேண்டும். நமக்கு முன்னால் திரண்டுள்ள பிற்போக்கு சக்திகள் பலமானவை. அவர்களது அரசு அடக்குமுறை இயந்திரத்தின் பலம் முழுவதும், குறிப்பாக பொலிஸ்படையின் பலம் முழுவதும் அவர்கள் பின்னால் இருக்கிறது. நாம் உறுதியுடன் நின்று வெற்றிபெறுவதற்காகநியாகம் எதற்கும் அஞ்சாதுசகல இடையூறுகளையும் தாண்டிச் செல்லவேண்டும்.

இந்த வருடம் மாவிட்டபுர ஆலயக்கதவுகள் தாழ்த்தப்பட்டமக்களுக்கு திறந்துவிடப்படுமா என்பது இத் தாழ்த்தப்பட்ட மக்களின் விழிப்புணர்ச்சியையும், ஒன்றுபட்ட ஐக்கியத்தையும் இலங்கையின் ஏனைய பகுதி மக்களின் ஆதரவையும் பொறுத்திருக்கிறது.

### 100 கிராமசேவகர் நியமிக்க முயற்சி

கோட்டை, ஞாயிறு

100 கிராம சேவகர்களை நியமிப்பதற்கு உள் நாட்டு அமைச்சர் மந்திரிசபையின் அங்கீகாரத்தை கோரியுள்ளார்.

தற்பொழுது கிராம சேவகர்கள க கடமையாற்றும் 160 விதானைமார்களை நிரந்தர மாக்குவதற்கான அங்கீகாரத்தையும் உள் நாட்டு அமைச்சர் கோருவார்.

### மொழிபெயர்ப்பாளர்

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம் நெல்லியான் ரோட்டைச் சேர்ந்த திரு. புத்திரர் பெரியதம்பி சத்தியவாக்குச் செய்த மொழிபெயர்ப்பாளராக யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் சத்தியப் பிரமாணம் எடுத்துக்கொண்டார்.

### பஸ் சேவை சீர்கேடு

முல்லைத்தீவு, ஞாயிறு

சென்ற சில தினங்களாக முல்லைத்தீவு பஸ் சேவைகள் அடிக்கடி துண்டிக்கப்பட்டு வருவதாலும் நேரம் தப்பிச் செல்வதாலும் முல்லைத்தீவில் உள்ள அரசாங்க இலாகாக்களில் வேலை செய்யும் உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் பெரிதும் கஷ்டமடைகின்றனர்.

## இந்த நாட்டின் பெயர் 'இலங்கை' அல்லவாம்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தமிழில் மொழிபெயர்த்து செய்கை முறைகளை விளக்கி உதவியாளராகப் பணியாற்றிவருகிருர்.

நீச்சல்வீரர்களை ஒழுங்குபடுத்துவதற்கும் கீரிமலைநீச்சல் தடாகத்தை நீச்சல் பயிற்சியாளர்கள் பாவிப்பதற்கும் ஏற்ற ஒழுங்குகளை யாழ்ப்பாணப் பகுதி விளையாட்டுத்துறை அதிகாரிகளும் தெல்லிப்பழை கிராமசபை அங்கத்தவர்களும் கீரிமலை கிராமசேவையாளரும் செய்துள்ளனர். திரு. பிராங்க் விளையாட்டுத்துறை அகைப்பின்பேரிலேயேஇங்கு நீச்சல் பயிற்சியளிக்க வந்துள்ளார்.

டில் வைக்கும்படி உத்தரவிட்டார். இதுசம்பந்தமாக பொலிசார் இன்னும் 6பேரைத் தேடிவருகின்றனர்.

திரு. இரத்தினசபாபதி இவ்வித உறுதியை அளித்தார்.

திரு சொக்கன் இங்கு பேசும்போது தெரிவித்ததாவது:

நாவலரின் முழுமையைக் காண அவர் எழுதி வெளியிட்ட நூல்கள் அனைத்தையும் கொண்ட ஒரு முழு நூலை வெளியிடவேண்டும். அண்மையில் நடந்த நாவலர் நூற்கண்காட்சி இதனையே வற்புறுத்துகிறது.

நாவலரது நூல்களைக் காணுமலேயே நாவலர்பற்றி ஆராய்ச்சி செய்கிருர்கள். இதுகோயில் மூலஸ்தானத்தில் விளக்குக்கு எண்ணையில்லாதிருக்க வெளியே சிகரம்கட்டி திருவிழா செய்வது போலாகும். நாவலரது முழுப்படைப்புக்களையும் ஒன்றுதிரட்டி ஒரே நூலாக வெளியிடவேண்டும் அதுவே நாவலருக்குச் செய்யத்தக்க நிரந்தரபணியாகும்,

தெரிவித்தா.

உள்நாட்டு இறைவரித் திணைக்கள உதவி ஆணையாளர் திரு. க. தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு. ஆ. தேவராஜன் பேசியதாவது:

நாவலரின் புறத்தோற்றத்தை அவரது சிலை நினைவுறுத்தும். மாநாட்டு மலர் அவரது அகத்தோற்றத்தை வலியுறுத்தும் நாவலர் ஒரு சாமியார் என்று அலட்சியமாக இருந்த இளைஞர் மத்தியில் இன்று அவர் புதுமைப் பொலிவுடன் தேசிய வீரராகத்திகழ்கிருர்.

மாநாட்டில் ஒழுங்குசெய்யப்பட்ட மாணவர் பேச்சுப் போட்டி மாணவர் மத்தியில் புதியதொரு விழிப்பை ஏற்படுத்தியுள்ளது. உண்மைத் தொண்டர்கள் யார் என்பதை இம்மாநாடு சுட்டிக் காட்டியுள்ளது,

மூன்ருவது உலகத்தமிழாராய்ச்சி மகாநாடு யழ்ப்பாணத்தில் நடந்தால் அதை ஏற்றுநடத்தக்கூடிய பக்குவம் நாவலர் மகாநாட்டை வெற்றியுடன் நடத்திய குழுவுக்கு உண்டு.

திரு. இ. மகாதேவா பேசு

ஞர் மத்தியில் நாவலர் சிலை ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்திவிட்டது

திருவாளர்கள் பரம்தில்லைராஜா, சு. பரநிருபசிங்கம், உடுவில் கிராம சபைத் தலைவர் திரு. ச. முத்துலிங்கம், ஓவியஆசிரியர் திரு. சின்னத்துரை உட்படப்பலர் கலந்து உரையாற்றினர்.

கத்தக்கது.

இவ்வாறு கரவெட்டி அர்ச். அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்றுவரும் ஞான ஒடுக்கத்தின்போது வண. குரவர் பி. யேசுநேசன் கூறிஞர்.

தொடர்ந்து அவர் பேசியதாவது:

குழந்தைகள் மீது அன்பு மட்டுமன்றி அவர்களின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு கட்டுப்பாட்டையும் ஓரளவு காட்டவேண்டும். நல்வாழ்வு வாழ்ந்து காட்டவேண்டியது பெற்ருேரின் கடமையாகும். சிறந்த சூழலில் அவர்களை வாழச் செய்வதும் பெற்ருேரின் கடமையாகும்.

தப்பட்டமக்களுக்கு திறந்து

## மடமொன்றில் இறந்து கிடந்தார்

வல்வெட்டித்துறை ஞாயிறு

வேலணையைச் சேர்ந்த ஆறுமுகம் செல்லப்பா என்னும் வயோதிபர் தொண்டமனுறு செல்வச்சந்நிதி மடமொன்றில் இறந்துகிடக்கக் காணப்பட்டார்.

கிராமசேவகர் திரு. வி. ஜெயவீரசிங்கம் சாட்சிகளை மரணவிசாரணையின் முன்னிலையில் ஆஜர் செய்தபின் மரணவிசாரணை அதிகாரி திரு எஸ். தாமோதரம் பிள்ளை வயோதிபத்திஞல் சுகவீனம் காரணமாக இயற்கை மரணம் சம்பவித்தது என தீர்ப்பளித்தார்.

## பத்திரிகையாளருக்கு நன்றி

நாவலர் மகாநாடு சிறப்புடன் வெற்றிபெற உழைத்தவர்கள் பத்திரிகையாளர்களும், உதவியாளர்களும் தான் என்று திரு. இரத்தின சபாபதி நன்றி தெரிவித்துப் பேசுகையில்கூறிஞர். கா. நி)

## சிரமதானம்

வல்வெட்டித்துறை, ஞாயிறு

பல ஏக்கர் நிலத்துக்குநீர் விநியோகம் செய்யும் குடத்தனை கிரிக்கட்டுக்குளம் பல காலமாக சீர்திருத்தம்செய்யப்படாமல் இருந்து வந்தால் கிராமசேவகர் திரு கே. ஏ. பரமானந்தம் தலைமையில் 35 பேர் சிரமதானம் மூலம் அதனை சீர்திருத்தம் செய்தனர்.

## இந்த நாட்டின் பெயர் 'இலங்கை' அல்லவாம்
### 'சிங்களதீப்ப' என்கிருர் திரு. பரணவிதான

கொழும்பு, ஞாயிறு

இலங்கையின் உண்மையான பெயர் 'சிங்கள தீப்ப' என்பதுதாஞம். இன்று நாம் இலங்கை (லங்காவ) என்று குறிப்பிடுவது இந்த நாட்டின் பெயர்அல்லவாம்.

இந்தக் கருத்தைப் புதைபொருள் நிபுணரான டாக்டர் செனரத் பரணவிதான வெளியிட்டிருக்கின்ருர்.

பழைய சரித்திர நூல்களில் குறிப்பிடப்படுகின்ற 'இலங்கை' நாம் வாழும் நாடுதாஞ அல்லது மலேஷியா உட்பட ஒரு பிரதேசமா என்பது ஒரு சிக்கல் நிறைந்த ஒரு பிரச்னையாக இருக்கிறதென்று திரு பரணவிதான குறிப்பிட்டுள்ளார்.

இன்று ஆங்கிலத்தில் 'சிலோன்' என்று குறிப்பிடப்படுவதும் இலங்கையல்ல. 'சீஹல' என்பதையே அவ்வாறு குறிப்பிட்டுள்ளது. 'ஈழம்' என்று தமிழ் மொழியில் குறிப்பிடப்படும் சொல்லின் சிங்களப் பெயர்ப்பு 'சீஹலம்' என்பதாகும் இதன் பொருளும் சிங்கள துவீபம் என்பதுதான். என்ருலும் இந்த இரண்டையும் 'இலங்கை' என்றுதான் நம்மவர்கள் குறிப்பிடுகிருர்கள். இது முழுதும் பிழையான மொழிபெயர்ப்பாகும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

## உயர் கல்விக் நிபுணர் குழு

கோட்டை ஞாயிறு

உயர் கல்வி அபிவிருத்திக்கு நிபுணர் குழுவொன்று அமைக்கவேண்டுமென்ற யோசனையை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது இந்தக் குழுவில் வெளிநாட்டு நிபுணர்களும் சேர்க்கப்படுவார்கள்.

ஓடும் பஸ்ஸில் படுகொலைகள்

## சாட்சிகளுக்கு பொலிஸார் பாதுகாப்பளிப்பர்

கோட்டை, ஞாயிறு

சில தினங்களுக்கு முன்னர் காலிப்பகுதி இ. போ. ச. பஸ்ஸில்நடைபெற்றகோரக் கொலைகள் சம்பந்தமாக பஸ்ஸில் பிரயாணம் செய்து கொண்டிருந்தவர்களிடமிருந்து சாட்சியங்கள் கோரப்பட்டுள்ளனவாயினும் இதுவரை எவரும் முன்வந்ததாக தெரியவில்லை. சம்பவம் நடந்தபோது சுமார் 50 பிரயாணிகள் பிரயாணஞ்செய்தாக பஸ்கொண்டக்டர் தெரிவித்துள்ளார்.

சாட்சியங்கள் கொடுக்க முன்வருவோருக்கு தகுந்த பாதுகாப்பு அளுக்கப்படுமென்றும், அவர்களை உடனடியாக காலி பொலிஸ் சுப்ரின்டனுடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. இத்தகவலை கொழும்பு தலைமைக்காரியாலய பொதுஜனதொடர்பு தகவல்பகுதி உதவிப்பொலிஸ் சுப்ரின்டன் திரு. டி. ஏச். ஆர். கொரியா தெரிவித்தார்.

இம்மாதம் 7ம் திகதி காலியிலிருந்து பத்தேகம நோக்கிச் சென்றுகொண்டிருந்த இ. போ. ச பஸ்ஸில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் வாள்போன்ற ஆயுதங்களால் இனந்தெரியாத சிலரால் கொலைசெய்யப்பட்டது தெரிந்ததே.

## 'கோடரியாலும் கம்பாலும் என்னைத் தாக்கிஞர்கள்'

வல்வெட்டித்துறை, ஞாயிறு

''முதலாம் எதிரியின் மகள் மங்கையற்கரசியும் நானும் எனது ஊரான அல்வாயில் இருந்தோம். சம்பவத்தினத்திற்கு ஒருவாரத்திற்கு முன்னர் அவரது பேத்தியார் வந்து முதலாம் எதிரியின் வீட்டிற்கு கூட்டிக்கொண்டு போஞர்'' என அல்வாய் தெற்கைச் சேர்ந்த மு. மயில்வாகனம் என்பவர் பருத்தித்துறை மாஜிஸ்டிரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறிஞர்.

இவ்வழக்கில் பருத்தித்துறை வி. எம், ருேட்டைச் சேர்ந்த ஏ. கிருஷ்ணபிள்ளை, கி. பரமகுரு ஆகிய இருவரும் அல்வாய் தெற்கைச் சேர்ந்த மு. மயில்வாகனம் என்பவருக்கு கடந்த மாசி மாதம் 11-ந் திகதி அடித்து படுகாயப் உண்டுபண்ணியதாக பொலிசாரால் குற்றம் சாட்டப்பட்டது.

மயில்வாகனம் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

சம்பவதினம் நான் பிற்பகல் 3-30 மணியளவில் எதிரியின் வீட்டுப்படலையில் நின்று எதிரியின் மகளின் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டேன். உடனே அவர் வந்தார். அவருடன் நான் வீட்டிற்குள் போனேன். அப்பொழுது எதிரிகள் இருவரும் கோடரியாலும் கம்பாலும் என்னைத் தாக்கிஞர்கள். நான் உடனே வந்துவிட்டேன். அப்போ மங்கையற்க்கரசி அழுதுகொண்டு இருந்தார். பிறகு பொலிசார் வந்து என்னை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றனர்.

1-ம் எதிரி ஏ. கிருஷ்ணபிள்ளை சாட்சியமளிக்கையில், இரண்டாம் எதிரி எனது மகன். மங்கையர்க்கரசி எனது மகள். வழக்காளி எனது வீட்டிற்குள் வந்து மகளைப் பிடித்து இழுத்தார். மகள் குளறிஞர்.

நித்திரையில் இருந்த நான் உடனே எழுந்து வந்து பார்த்தபோது வழக்காளி மகளின் கையை பிடித்து இழுத்துக் கொண்டிருந்ததைக் கண்டேன். உடனே 2, 3 முறை அவருக்கு அடித்தேன். அவருக்கு நான் மகளை விவாகம் செய்து கொடுக்கவில்லை. மகள் இப்போ எங்களுடன் தான் இருக்கிருர்.

விசாரணையின் பின்னர் மாஜிஸ்டிரேட் எதிரிகளைச் சுற்றவாளிகளாகக் கண்டு விடுதலை செய்தார்.

பஸ்தொழிலாளர் வேலை நிறுத்தம்

## சங்கபிரதிநிதிகள் வராததால் முடிவு எடுக்கமுடியவில்லை

யாழ்ப்பாணம், திங்கள்

பஸ் தொழிலாளர் மத்தியில் பல சங்கங்கள் இருந்தபோதிலும் அந்தச் சங்கங்கள் எதையும் கலந்தாலோசிக்காமல் இலங்கை பஸ் தொழிலாளர் கழகம் தானே முன்வைத்த 19 கோரிக்களுக்கு மற்றச் சங்கங்களின் ஆதரவைக் கேட்டது. தொழிற்சங்க ஐக்கியத்தை மனத்திற் கொண்டு கோரிக்கைப் பட்டியலில் இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் நாமும் கையொப்பமிட்டோம்.

இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்க யாழ் டிப்போ செயலாளர் திரு. எஸ். தர்மராசா வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அறிகையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: —

பிரதேச முகாமையாளருடன் மேற்படி கோரிக்கைகள் சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடைபெற்றது. பேச்சுவார்த்தை எவ்விதபலனும் தராததால, அன்று மாலை மேற்படிகோரிக்கைப் பட்டியலில் கையெழுத்திட்ட சகல சங்கங்களும் கூடி கூட்டுக்கமிட்டி ஒன்று தெரிவு செய்யப்பட்டது. மீண்டும் யாழ். பிரதேச முகாமையாளருடன் பேச்சுவார்த்தை நடைபெற்றது. அன்றைய பேச்சுவார்த்தையிலும் சுமுகமான முடிவு எதுவும் ஏற்படவில்லை.

கடந்த மாதம்17-ம் தேதி நடந்த பொதுக் கூட்டத்தில் போராட்டம் ஒன்றே வழியெனத் தீர்மானித்தனர். வேலைநிறுத்தத்திற்கான திகதியை தீர்மானிக்கும் பொறுப்பு செயல் கமிட்டியிடம் விடப்பட்டது. இம்மாதம் 2ம், 6ம் திகதிகளில் நடந்தகூட்டங்களுக்கு இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்க பிரதிநிதிகள் தவிர வேறுஎவரும் வரவில்லை. எனவே வேலை நிறுத்தம் சம்பந்தமாக முடிவெடுகக முடியாமல் போய் விட்டது.

## விமானத்தை காணவில்லை

காட்மாண்ட், ஜூலை 12

நேபாளத்தில் 30 பேருடன் பறந்த விமானம் ஒன்றைக் காணவில்லையென அறிவிக்கப்பட்டது. காட்மாண்டிலிருந்து இன்று புறப்பட்ட சில நிமிடங்களில் விமானத்தின் ரேடியோ தொடர்புகள் அறுந்துவிட்டனவாம். விழுந்து நொறுங்கியிருக்கலாமெனச் சந்தேகிக்கப்படும் இடங்களில் தேடுதல் வேலைகள் நடைபெறுகின்றன.

## 'சீனுவுடன் நட்பையே விரும்புகிறது'

– மாஸ்கோ

மாஸ்கோ, ஜூலை 12

சீனுவுடன்சண்டை செய்வதை சோவியத் மக்கள் விரும்பவில்லை என்று மாஸ்கோ வானெலி இன்று ஒலிபரப்பியது. சீன, சோவியத் எல்லையில் சீனு ஆத்திரமூட்டக்கூடிய விதத்தில் நடந்துகொண்டாலும், சீனமக்களுடன் சோவியத் மக்கள் நட்புப்பாதையில் சென்று கம்யூனிஸ சமுதாயம் ஒன்றை அமைக்க விரும்புகிருர்களென்று அது மேலும் தெரிவித்தது.

## கோர்ட்டு வளவுக்குள் தாக்கிஞர்களாம்

வல்வெட்டித்துறை, ஞாயிறு

பருத்தித்துறை மாஜிஸ்திரேட் கோர்ட்டில் வழக்கு விசாரணை நடந்துகொண்டிருந்த சமயம் கோர்ட்டு வளவுக்குள்வைத்து ப. திருநாவுக்கரசு என்பவருக்கு க. வல்லிபுரம், வ. இராசரத்தினம் ஆகிய இருவரும் அடித்து தாக்கியதாக பொலிஸ் சார்ஜண்ட் திரு. நவரத்தினத்தால் எதிரிகள் இருவரும் கைதுசெய்யப்பட்டு மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டபோது மாஜிஸ்திரேட் எதிரிகள்இருவரையும் ரூபா 500 பிணையில் செல்லுமாறும் வேருெரு திகதிக்கு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜராகும்படியும் உத்தரவிட்டார்.

## "பொருளாதார வளத்தை முன்னேற்ற வேண்டும்"

யாழ்ப்பாணம், திங்கள்

இன்றுள்ள நிலைமையில் தமிழ் பேசும் மக்கள் ஒன்று சேர்ந்து இந்த நாட்டின் பொருளாதார வளத்தை முன்னேற்றவேண்டும். அப்படியாஞல்தான் நன்மையடைவார்கள்.

சாவகச்சேரியில் நேற்று முன்தினம் நடந்த தமிழ் காங்கிரஸ் வாலிப முன்னணி கூட்டத்தில் முன்ஞள் சாவகச்சேரி எம். பி திரு. வி. குமாரசாமி பேசும்போது மேற்கண்டவாறு கூறிஞர்.

திரு. குமாரசாமி மேலும் கூறியதாவது: நாட்டின் பொருளாதார முன்னேற்றம்தான் மிகவும் முக்கியமானது. ஒருநாடு சீரும் சிறப்புமாக இருந்தால்தான் அந்நாட்டு மக்களும் சிறப்படைவார்கள். வாலிபர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தை தீர்ப்பதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும்

தமிழ்காங்கிரஸ் தலைவரின் வழிதான் சரியான வழியென்பதை இன்று தமிழ் மக்கள் உணர்ந்துவிட்டனர். கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் காங்கிரஸ் ஒரே கொள்கையைத் தான் கடைப்பிடித்துவருகிறது.

வாலிப முன்னணித் தலைவராக திரு. எஸ். பி. மயில்வாகனமும் இணைச்செயலாளராக திரு. சி. செல்வேந்திரா திரு. கே கைலநாதன் ஆகியோரும் பொருளாளராகதிரு. பி. சர்மாவும்தெரிவு செய்யப்பட்டனர்.

## விவசாயிகள் பயிற்சி வகுப்பு

பூநகரி, ஞாயிறு

விவசாயிகளுக்கான பயிற்சி வகுப்பொன்று பூநகரிகிராம சபை மண்டபத்தில் திரு. வை. வல்லிபுரம் தலைமையில் நடைபெற்றது.

யாழ். கமத்தொழில் அத்தியட்சகர் திரு. மாணிக்கவர்சகர் உடபட மற்றும் பலர் உரையாற்றினர். ஒவ்வொரு பயிர்ச்செய்கைக் குழுக்களிலிருந்தும் பிரதிநிதிகள் சமூகமளித்திருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகிரங்க ஏல விற்பனை

**மலேவேம்பு (மகோகனி) மரம்**

கோப்பாய் கிராமசபைத் தலைவரால் கோப்பாய் கிராமசபை அலுவலகத்திற்கு எதிரேயுள்ள கிராமசபைரேட்டிலுள்ள ஒருமலேவேம்பு (மகோகனி) மரம் 29-7-69 காலை 10.30 மணிக்கு பகிரங்க ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

கேள்வி கேட்க விரும்புவோர் கிராமசபையில் பிரசன்னமாகவும்.

1. கேள்விகேட்க விரும்புவோர் கேள்வி வைப்புப்பணமாக ரூபா 100/- கிராமசபைக் கந்தோரில் கட்டிப் பற்றுச்சீட்டுப் பெறுதல் வேண்டும். பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தே கேள்விகள் கேட்க அனுமதிக்கப்படும்.

2. கேள்வி கேட்போர் உடனடியாககேட்டதொகையில் 1/2 (அரைப்பங்கை) கிராமசபைக்கந்தோரில் கட்டுதல் வேண்டும். பாக்கிப் பணத்தை 4-8-69 நண்பகல் 12 மணிக்குமுன் கட்டுதல் வேண்டும்.

3. மரத்தை 15-8-69ன் முன் தறித்து அப்புறப்படுத்துதல் வேண்டும்.

4. தறிக்கும்போது ஏற்படும் சேதங்கட்கும், நஷ்டங்கட்கும் நீங்களே பொறுப்பாளிகளாவர்.

5. கேள்விக்காரர் குறித்த தவணைக்குள் பணத்தைக் கட்டத் தவறினுலோ, மரத்தைத் தறித்து அப்புறப்படுத்தத் தவறினுலோ, வைப்புப் பணமாக வைக்கப்பட்ட ரூபா 100/- பறிமுதலாக்கப் படுவதுடன், மரத்தின் உரிமையும் இரத்துச்செய்யப் படும். அத்துடன் மரமும் மறுமுறை ஏலத்தில் விற்கப் பெறும்.

தி. பரமானந்தராசா,
தலைவர்,
கோப்பாய் கிராமசபை.

கோப்பாய் கிராமசபை
அலுவலகம்,
கோப்பாய்.
0-7-69. 1658

யாழ்ப்பாண பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

## காரியதரிசிப் பதவி

மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் 31-7-69 முன் தமது விண்ணப்பங்களை பதிவுத் தபாலில் தலைவர், யாழ்ப்பாணம் ப. நோ. கூ. ச. சமாசம், 74 3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம், என்னும் முகவரிக்கு அனுப்பவும்.

வயது:- 31-7-69ல் 40வயதிற்குட்பட்டவராய் இருத்தல் வேண்டும்.

கல்வித்தகைமை:- கணக்கியல் / வர்த்தகத்துடன் ஓர் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகப் பட்டதாரியாய் இருத்தல் வேண்டும்.

தமிழ் அறிவு அத்தியாவசியம்.

நிருவாக அனுபவம் விரும்பத்தக்கது.

பிணை:- உரொக்கம் ரூபா 2000/-துடன் ஆதனம் ரூபா 3000/-.

சம்பளம்:-
250/- — 400/-

10 X 15

தற்போது சமாசம் வழங்கும் படிகளுடன். 1652

வல்வெட்டித்துறை
**ரஞ்சஞ தியேட்டர்**
தினசரி 6-30, 9-30.
பிரிபோயா, போயா காலை 10-30
எம். ஜி ஆர். — ஜெயலலிதா
நடித்த
**ஒளிவிளக்கு**
(ஈஸ்ட்மென் கலர்)

**வெஸ்லி சினிமா**
மானிப்பாய்
தினசரி6-30, இரவு10-00
பிரிபோயா, போயா 2-30மணி
எம். ஜி.ஆர். -ஜெயலலிதா
நடித்த
**சந்திரோதயம்**

**4வது வாரம்!**
கெப்பிட்டல் பிளாஸா வெலிங்டன்
(கொழும்பு) (வெள்ளவத்தை) (யாழ்ப்பாணம்)
ஆகிய திரைகளில்
ஸ்ரீதரின் கதை, வசனம், டைரக்ஷனில் உருவாகி
★ சிவாஜிகணேசன்
★ கே. ஆர். விஜயா
முத்துராமன்



## ஹாட்லி கல்லூரி விளையாட்டு முடிவுகள்

பருத்தித்துறை, ஞாயிறு

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற வருடாந்த இல்லங்களுக்கிடையிலான விளையாட்டுப்போட்டி முடிவுகள் வருமாறு:


அஞ்சலோட்டம்: ஷெராட் இல்லம். தடைதாண்டலோட்டம்: எம். செல்வானந்தராசா, எஸ். ஆனந்தகணேசன்.

### தனிவெற்றி வீரர்

12 வயதுக்குட்பட: டி. ராஜகுமார், 13 வயதுக்குட்பட: என். கணேசன், 14 வயதுக்குட்பட: என். செந்திவேல், 16 வயதுக்குட்பட: பீ. அன்பழகன், 17 வயதுக்குட்பட: எஸ். ரங்கராஜா, 19 வயதுக்குட்பட: டி. கே. புயெல். உத்தியோகத்தர் ஓட்டப் போட்டி: திரு. ஏ. சிவபாதசுந்தரம், திருமதி கே. தியாகராசா. திரு. ஜே. எஸ். சத்தியநாதன், திருமதி எம். அற்புதநாதன்.

முதலிடத்தை 'ஷெராட்' இல்லமும் இரண்டாமிடத்தை 'கணபதிப்பிள்ளை' இல்லமும் பெற்று வெற்றி வீரராயினர்.

திருமதி எஸ். வி. குணநாயகம் பரிசில்கள் வழங்கினுர்



—சினிமா விமர்சனம்—

## தாமரை நெஞ்சம்

கணேஷ்

நெஞ்சத்துள்ளேயே கட்டி வளர்க்கும் ஆசை உள்ளேயே ஊறி வளரும் நேரத்தில் அதுஇடித்துத் தகர்க்கப்படுகிறது. புன் சிரிப்போடு கண்களை ஒருமுறை மூடுகிருர் சரோஜாதேவி. நெஞ்சத்தின் பிழிவு கண்களால் வழிகிறது. தன் தோழிக்காக காதலை விட்டுக் கொடுத்துவிட்டு அந்தஅதிர்ச்சியை உள்ளேயே அடக்கி வைக்கும் கட்டம் 'தாமரை நெஞ்சத்தின்' தனிச்சிறப்பான கட்டம்.

எதையும் தாங்கிப் பழகிப் போன கமலாவாக வரும் சரோஜாதேவியின் நடிப்பு மறக்கமுடியாததாக இருக்கிறது. அமைதி, அடக்கம், பொறுமை, பணிவு இத்தனையும் கலந்தவள் கமலா. என்பதை சிறந்த நடிப்பால் வெளிப்படுத்துகிருர் அவர்

'நல்வரவு' என்று எழுதப்பட்டு வாசலில்தாறுமாருகக் கிடக்கும் சாக்கை சரியாகப் போடுவதிலிருந்து ஒழுங்கீனமாக இருக்கும் எல்லாவற்றையும் சரிசெய்து தனிமையாகத்தானே நினைத்து நினைத்து மகிழ்ந்து பூஜிக்கும் காதலுக்காக வாழ்வின் முடிவைத் தானே தேடிக்கொள்ளும்வரை சரோஜாதேவியின் நடிப்பு மனத்தில் நிறைகிறது.

ஜெமினி காதலிக்கிருர் வாணிஸ்ரீயை. கண்கள் நான்கு இனிமையாகக் கதை பேசுவது அனுபவிப்பதற்கு சுகமாக இருக்கிறது. வாணிஸ்ரீயை நன்கு நடிக்க வைத்திருக்கிருர் டைரக்டர்பாலச் சந்தர். ஊஞ்சலில் ஆடி

உடுப்பிட்டி அமெரிக்கமிஷன்

## வருடாந்த விளையாட்டு போட்டி முடிவுகள்

இமையாணன், ஞாயிறு

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களின் சில விபரம் வருமாறு:

19வயதுக்கு மேற்பட்டோர்

100 யார் ஓட்டம்: வி. யோகராசா, ரி. சிவநாதன், பி. ரத்தினசபாபதி.

உயரம் பாய்தல்: எஸ். அருந்தவராசா, கே. குலேந்திரன், எஸ். வேலாயுதம்.

நீளம்பாய்தல்: கே.குலேந்திரன், வி அமிர்தலிங்கம், வி யோகராசா.

குண்டெறிதல்: கே.குலேந்திரன், வி. அமிர்தலிங்கம், அருந்தவராசா.

ஒரு மைல் ஓட்டம்: ரி. ரவீந்திரன், எஸ். நாராயணசாமி, எஸ். குலேந்திரன்.

அஞ்சல் ஓட்டம் (4X110): செல்லையா இல்லம், பிக்னல் இல்லம், நியுற்றன் இல்லம்.

19வயதுக்குக்கீழ்ப்பட்டோர் நாதன், எஸ். ரவீந்திரன், கே. தருமகுலசிங்கம்.

கோல் ஊன்றிப் பாய்தல்; தர்மகுலசிங்கம், சந்திரசிகாமணி, ரி. பரமானந்தன்.

தட்டு வீசுதல்: எம். சிதம்பரநாதன், ஜெயகோபாலசாமி, தர்மகுலராசா.

குண்டு எறிதல்: எம். சிதம்பரநாதன், ரி. பரமேஸ்வரன், என். அன்னலிங்கம்.

ஈட்டி எறிதல்: எம். சிதம்பரநாதன், வி. தர்மகுலராசா, எஸ். அன்னலிங்கம்.

17வயதுக்குக்கீழ்ப்பட்டோர்

440 யார் ஓட்டம்: எஸ். சுந்தரநாதன், எஸ். சிவநேசன், வி. அரியசிகாமணி.

880 யார் ஓட்டம்: எஸ். சுந்தரநாதன், எஸ். சிவநேசன். பி. இராசையா.


உயரம் பாய்தல்: எஸ். சுந்தரலிங்கம், என். செல்வராசா, வி. புவனேந்திரனும், எம். அப்புத்துரையும்.

நீளம் பாய்தல்: ஜி. செல்வக்குமார், என். கதிரவேல்,

**டேவிட் பிரவுண்**
**ட்ராக்டர்கள்**
**சிறந்தவை என்பதற்கு**
**பிரதான 7 காரணங்கள்**

உண்மையில் டேவிட் பிரவுண் ட்ராக்டர் சிறந்தது உங்கள் வேலைகளுக்குகந்தது என்பதற்குப் பல காரணங்களிருப்பினும், நாங்கள் 7 சிறப்பான விஷேச அம்சங்களை மட்டும் கூறுகிறேம். மேலும் நீங்கள் எம்முடன் தொடர்பு கொண்டாலோ அல்லது நேரில் வருகை தந்தாலோ நாங்கள் அதன் மிகச் சிறந்த பலாபலன்களை உங்களுக்கு மகிழ்சியுடன் தெரிவிக்கக் காத்திருக்கிறேம்.

- இன்று துரிதமாக விற்பனையாகும் ட்ராக்டர்.
- உங்கள் தேர்வுக்கு 36-46-55-72 குதிரைச் சக்தி கொண்ட 4 வித ட்ராக்டர்கள்.
- பலவிதமான இணைப்புக்கருவிகளும் கையிருப்பிலுண்டு.
- உதிரிப்பாகங்கள் உடனடியாகக் கிடைக்கின்றன.
- இயக்குவதற்கு மிக வசதியான ட்ராக்டர்.
- ரோலண்ட்ஸ் ஸ்தாபனத்தின் உத்தரவாதம் கொண்டது
- இலங்கை முழுவதிலும் பாவனைக்குப் பின் கிடைக்கும் சேவை வசதிகளுக்கு உத்தரவாதம்.



HOUSE OF R ROWLANDS
ரோலண்ட்ஸ் (ட்ராக்டர்ஸ்) லிமிட்டெட்
103. ........ ரோட் கொழும்பு 7.
D B

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்துராமன்
கீதாஞ்சலி
நடித்த



நெஞ்சிருக்கும் வரை

கிங்ஸ்லி (கொழும்பு) விஜயா (மட்டுநகர்) ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை)
மற்றும் சினிமாஸ் திரைகளில் காண்பிக்கப்படுகிறது

★ ரவிச்சந்திரன்
★ கே. ஆர். விஜயா
★ நாகேஷ் ★ சோ ★ குமாரி சச்சு
இன்னும் பலர் நடித்த
முக்தா பிலிம்ஸ் அளிக்கும்
நினைவில் நின்றவள்


ரவீந்திரன், எஸ். நாராயணசாமி, எஸ். குலேந்திரன்.

அஞ்சல் ஓட்டம் (4X110): செல்லையா இல்லம், பிக்னல் இல்லம், நியுற்றன் இல்லம். 19வயதுக்குக்கீழ்ப்பட்டோர் 440 யார் ஓட்டம்: வி. பத்மநாதன், ரி. சகாதேவன், கே. கணபதிப்பிள்ளை.

880யார் ஓட்டம்: ரி. விநாயகமூர்த்தி, பி. வியாகேசு, வி. சிவானந்தன்.

ஒரு மைல் ஓட்டம்: ரி. விநாயகமூர்த்தி, வி. வியாகேசு, வி. சிவானந்தன்.

உயரம்பாய்தல்: வி. பத்ம

உயரம் பாய்தல்: எஸ். சுந்தரலிங்கம், என். செல்வராசா, வி. புவனேந்திரனும், எம். அப்புத்துரையும்.

நீளம் பாய்தல்: ஜி. செல்வக்குமார், என். கதிரவேல், எஸ். சுந்தரநாதன்.

தட்டுவீசுதல்: எஸ். சுந்தரலிங்கம், கே. நவசேகரமலர், என். குணரத்தினம்.

குண்டு எறிதல்; கே. நவசேகரமலர். வி. தவராசா, என். செல்வராசா,

ஈட்டி எறிதல்: எஸ். சுந்தரலிங்கம், என். குணரத்தினம், கே. திருவிழங்கம்.


ராணி (யாழ்ப்பாணம்) [தினசரி 4 காட்சிகள்]
ஜெய்சங்கர் விஜயலக்ஷ்மி நடித்த
அன்பு வழி


ராஜா யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சுந்தரராஜன், மனோகர், ராமதாஸ்
பேபி ராணி, பத்மினி, சோ, தங்கவேலு
நடித்த
குழந்தைக்காக


நான்கு இனிமையாகக் கதை பேசுவது அனுபவிப்பதற்கு சுகமாக இருக்கிறது. வாணிஸ்ரீயை நன்கு நடிக்க வைத்திருக்கிறார் டைரக்டர் பாலச்சந்தர். ஊஞ்சலில் ஆடி கால்முறிந்தபின் சில்லு நாற்காலியில் இருந்துகொண்டு அவர் நடிப்பது இயற்கையாகவே இருக்கிறது.

பலகீனமாக ஒரு பாத்திரத்தை நாகேஷ் ஏற்றுவிட்டதால் படத்துக்கு அவரால் அதிக உதவி செய்யமுடியவில்லை. எத்தனையோ நோய்களைக் குணப்படுத்துவதற்கு எவ்வளவோ மருந்துகளைக் கண்டுபிடித்து விட்ட இக்காலத்தில் நாகேஷ் தாங்கி வரும் நாராயணன் பாத்திரம், கதை ஆசிரியர் பாலச்சந்தர் முன்னேற்றத்தை விரும்பவில்லையோ என்ற சந்தேகத்தைத்தான் தோற்றுவிக்கிறது. இதை மாற்றியிருந்தால் தாமரை நெஞ்சத்தின் வெற்றி இன்னும் ஒரு படி உயர்ந்திருக்கும். ஜெமினிகணேசனின் அண்ணனாக வரும் சுந்தர்ராஜன் நடிக்கவில்லை. ஓர் உண்மையான சகோதரராகவே தெரிகிறார். அவரது தனி முத்திரைகளை பல இடங்களில் வெளிப்படுத்துகிறார்.

தான் காதலிக்கும் ஒருவனது பெயர்ப்பலகையை துடைப்பத்தால் துடைக்காது தனது சேலை முந்தானையால் காதலி துடைப்பது டைரக்டர் பாலச்சந்தரின் திறமையை வெளிப்படுத்துகிறது. எதிர்பாராத நல்ல திருப்பங்களை ஏற்படுத்தியதற்காகவும் நெஞ்சைத் தொடக்கூடிய உணர்ச்சிமயமான கட்டங்களை சேர்த்ததற்காகவும் பாலச்சந்தரைப் பாராட்டலாம்

குடும்பத்தோடு சென்று பார்க்கக்கூடிய படம் 'தாமரை நெஞ்சம்' யாழ்ப்பாணம் வின்ஸரில் இப்போது ஓடிக்கொண்டிருக்கிறது.





இப்பொழுது நடைபெறுகிறது
யாழ். வின்ஸர்
வெண்திரையில்
தினசரி 4 காட்சிகள்
★ ஜெமினிகணேசன்
★ சரோஜாதேவி
நாகேஷ், வாணிஸ்ரீ, சுந்தரராஜன்
நடித்த
1968-ம் ஆண்டின் சிறந்த படமெனப் பாராட்டுப்பெற்ற
ஓர் ஒப்பற்ற குடும்பச்சித்திரம்
கே. பாலசந்தரின்
தாமரை நெஞ்சம்

MAN[illegible]HARA
JAFFNA
Daily 6-[illegible] & 10-00 p.m.
Joy Aviya vickrama
Vijitha Mallika
in
ANGAVENASEVANELLA
(Sinhalese)

REGAL JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m
THE BEST OF
LAUREL & HARDY
(Color)

HOUSE OF R ROWLANDS
ரோலண்ட்ஸ் (ட்ராக்டர்ஸ்) லிமிட்டெட்
103, [illegible] கொழும்பு 7
D B




BAYER

பாதுகாப்புடன் உங்கள்
லாபத்தைப் பெருக்குங்கள்

உயர்தர கனிச்சத்து உப்புக்கலவை பிகுட்றின் உணவு மூலம் இயற்கை ரீதியாக தாங்குஞ் சக்தியை வளர்த்துக் கொள்ளுங்கள்.

* இளங்கால்நடைகளின் தடைபடா வளர்ச்சியையும், விலங்குணவில் பற்றுக்குறையாகவிருக்கும் கனிச்சக்தியைத் தருவதன் மூலம் வளர்ந்த விலங்குகளின் வளர்ச்சியையும் பெக்கூட்றின் உறுதி செய்கிறது.
* பால்கறக்கும் பசு, கோழிகள், பன்றிகள் முதலிய பிரத்தியேகமாக அடைத்து வளர்க்கப்படும் சகல கால்நடைகளுக்கும் பெக்கூட்றின் உகந்தது.)
* விலங்கின உணவு விற்பனையாளர்களிடமும் பிரபல ரசாயன பொருட்கள் விற்பனையாளர்களிடமும் பின்வரும் இலங்கையின் ஏக விநியோகஸ்தர்களிடமும் எப்பொழுதும் கிடைக்கும்:-

ஹேலீஸ் லிமிட்டட்
400, டீன்ஸ் ரோட், கொழும்பு-10.
தபால் பெட்டி 70, தொலைபேசி: 96333
HAYLEYS

VISION 31-69



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோவியத்-சீனஎல்லைப்பேச்சுக்களில் முட்டுக்கட்டை

## சீன அதிகாரிகள் வெளிநடப்பு

மாஸ்கோ, ஜூலை 13

**சோவியத் யூனியன் அதிகாரிகளுக்கும் சீன அதிகாரிகளுக்குமிடையில் காபரொக்ஸ் தீவில் நடைபெற்றுவந்த பேச்சுவார்த்தைகள் முறிந்து விட்டதாக செய்தி கிடைத்துள்ளது.**

சோவியத்-சீன எல்லைத்தகராறுகளை தீர்த்துக்கொள்ளும் நோக்கத்துடன் இந்தப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வந்தன. ஐந்து ஆண்டுகளுக்கு முன் முறிந்து போன இப் பேச்சுவார்த்தைகள் கடந்தமாதம் 18-ம் திகதி மீண்டும் துவக்கப்பட்டன.

பேச்சுவார்த்தைகளை தொடர்ந்து நடத்தலாம் என்று ரஷ்யத் தரப்பில் கோரப்பட்ட போதிலும் சீனர்கள் அதனைப் புறக்கணித்துவிட்டு வெளிநடப்பு செய்ததாக 'டாஸ்' அறிவித்துள்ளது.

பேச்சுவார்த்தைகள்நடைபெற்றுக்கொண்டிருந்த சமயத்திலும்கூட கடந்தசெவ்வாய்க்கிழமை சீன சிப்பாய்கள் ஓமார் நதியில் வேலையில் ஈடுபட்டிருந்த ரஷ்யத் தொழிலாளர்கள் மீது தாக்குதல் நடத்தியதாக டாஸ் குற்றம் சாட்டியது.

ஆரம்பத்திலிருந்தே சீனர்கள் இருதரப்பு கப்பல் போக்குவரத்து விஷயங்களை பற்றி பேச விரும்பாமல் சமீப காலங்களில் ஏற்பட்ட மோதல்களுக்கான காரணங்களைப்பற்றி விவாதிக்கவே அதிகம் அக்கறைகாட்டிவந்தார்களாம்.

இந்தப் பேச்சுவார்த்தைகள் மூலம் சீனர்களுக்கும் ரஷ்யர்களுக்குமிடையிலான பிணக்குகள் பற்றி விரிவாக ஆராய்வதற்கும் இணக்கம் ஏற்படுவதற்கும் வழிபிறக்கும் என்று ரஷ்யர்கள் மனமார எதிர்பார்த்து வந்தனர் என்று நிருபர்கள் கூறுகின்றனர். சமீபத்தில் சோவியத் ஆட்சிமன்றத்திலும் கூட சோவியத் வெளிநாட்டு அமைச்சர் திரு. குரோமிக்கோ இவ்வாறு நம்பிக்கை தெரிவித்திருந்தார்.

## உலகயுத்தம் பற்றி சீனர்கள் ஆருடம்?

சீனாவின் குவாட்பாங் மாகாணத்தின் தலைநகரான காண்டனில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பேசிய சீன அதிகாரி ஒருவர் ரஷ்யாவுக்கும் சீனாவுக்குமிடையில் சண்டை நடப்பது திண்ணம் என்றும் அக்டோபர் மாதத்தில் மூன்ருவது உலக யுத்தம் வெடிக்கப் போவதாகவும் ஆருடம் கூறியதாக ஹாங்காங்கிலிருந்து கிடைத்த செய்திகள்கூறுகின்றன. இப்படியான கூட்டங்கள் சீனு முழுவதும் நடத்தப்படுவதாகவும் சீன மக்களும் அதிகாரிகளும் பெரிய யுத்தமொன்றுக்கு தயாராகும்படி கேட்கப்படுகிருர்கவென்றும் செய்திகள் கூறுகின்றன.

## சீன - இந்திய மோதல்கள்

புதுடில்லி, ஜூலை 13

இந்தியாவின் வடபகுதி எல்லையில் சீன சிப்பாய்கள் இந்திய எல்லைக்குள் வந்து இந்திய சிப்பாய்கள்மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்திருப்பதாக இங்கு மிகவும் பித்திக் கிடைத்த ஊர்ஜிதமற்ற செய்திகள் கூறுகின்றன. லீபூர் ஏரிக்கணவாய்ப் பகுதியில் இந்தத் தாக்குதல் நடந்ததாகக் கூறப்படுகின்றது.

விண்வெளியில்

## ஒருநாள் சாப்பாடு ரூ. 2250

நாடிக் (மாசா சூசெட்ஸ்), ஜூலை, 13

வானவெளி வீரர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 2250 செலவில் உணவு தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த உணவுவகைகளை அமெரிக்க ராணுவப்பிரிவின் நாடிக் ஆய்வுக் கூடத்தை சேர்ந்த உணவு நிபுணர்கள் தயாரித்து இருக்கிருர்கள்.

வானவெளிவீரர்கள் உண்பதற்காக இவர்கள் தயாரித்த 52 வகையான உணவுகளை வானவெளிப் பயணத்திட்ட நிர்வாகம் அங்கீகரித்து உள்ளது

'அப்பல்லோ-8' ராக்கெட்டு கடந்த ஆண்டு கிறிஸ்மஸ் வேளையில் சந்தி

## காங்கிரஸ்மொழிக்கொள்கை தமிழ்நாடுபிரமுகர்கண்டனம்

பெங்களூர், ஜூலை13 இந்தக்கொள்கையை மாற்

## கென்னடி முனைக்கருகில் சோவியத் கப்பல்கள்

கென்னடிமுனை, ஜூலை 13 கியூபா செல்லும் வழியில் 7 கப்பல்களைக் கொண்ட ரஷ்ய கடற்படை அணியொன்று கென்னடி முனைக்கு சற்றுத் தொலைவில் வந்து நிலைகொண்டிருக்கின்றது. இந்தக்கப்பல்களின் நடமாட்டத்தை அமெரிகக கப்பல் படை பிரிவொன்றும், விமானங்களும் உளவு பார்த்து வருகின்றன.

அட்லாண்டிக் சமுத்திரப் பகுதியில் யுத்த ஒத்திகை நடத்திக் கொண்டிருந்த இந்த ரஷ்யக் கப்பல் அணி கியூபாவுக்கு நல்லெண்ண விஜயம் செய்யும் நோக்குடன் கென்னடி முனைவழியாகப் போகவிருக்கின்றன.

அடுத்த 16ம் திகதி கென்னடி முனையிலிருந்து சந்திரனை நோக்கி அப்பல்லோ-11 கலம் செலுத்தப்படுவதை இந்த ரஷ்யக் கப்பல்களில் உள்ளவர்கள் பார்த்துவிட்டுதான் அப்பகுதியிலிருந்து போவார்கள் என்று அமெரிக்க அதிகாரிகள் கருதுகிருர்கள்.

ரஷ்யர்கள் விண்வெளியில் மேடைகள் அமைப்பதில் ஆர்வம் கொண்டிருப்பதாக மாஸ்கோவிலிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன. பூமியைச் சுற்றியும் சந்திரனைச் சுற்றியும் இந்த மேடைகள் அமைக்கப்படுமாம். எதிர்காலத்தில் மனிதன் சூரியமண்டலத்துக்கப்பாலும் பிரயாணங்களை மேற்கொள்வான் என்பதில் ரஷ்யர்கள் நம்பிக்கை கொண்டிருப்பதாக சோவியத் யூனியனுக்குச் சென்று திரும்பியுள்ள அமெரிக்க விண்வெளிவீரர் பிராங்க் போர்மன் கூறியிருக்கிருர். கென்னடி முனையில் அப்பல்லோ-11 கலத்தை அனுப்புவதற்கான ரொக்கட் பரிசோதனைகளின் இறுதிக் கட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

தி. மு. க. பொதுச்செயலாளர் பதவி

## கருணாநிதி - நெடுஞ்செழியன் இருவரும் போட்டி

### 27-ம் திகதி தேர்தல்

சென்னை, ஜூலை 13 தமிழ்நாடு திராவிட முன்னேற்றக்கழகத்தின் பொதுச் செயலாளர் பதவிக்கு முதலமைச்சர் திரு. கருணாநிதி போட்டியிடவிருக்கிருர். இப் பதவிக்குப் போட்டியிடப் போவதாக ஏற்கனவே திரு. இரா. நெடுஞ்செழியன் அறிவித்திருப்பது தெரிந்ததே.

இம்மாதம் 27ந் திகதி பொதுச் செயலாளர் பதவிக்குத் தேர்தல் நடைபெறவிருக்கின்றது. திரு. நெடுஞ்செழியனும், திரு. கருணாநிதியும் ஒரே பதவிக்குப் போட்டியிட்ட போதிலும் இப்பதவிக்குப் போட்டியிருப்பதை இருவருமே விரும்பவில்லையென்று கருதப்படுகின்றது

ஆட்சித் தலைமையும், கட்சித் தலைமையும் மோதிக்கொள்ளாமல் இணைந்து கருத்து வேறுபாடின்றிச் செயல்பட வேண்டும் என்ற காரணத்தினுலேயே திரு. கருணாநிதி இந்தப் பதவிக்

அடுத்த ஆகஸ்ட் மாதத்தில் விஸ்தரித்து அமைக்கப் போவதாக திரு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

பொதுச் செயலாளர் பதவிக்கு திரு. நெடுஞ்செழியன் போட்டியிடவிருப்பதை நிருபர்கள் திரு. கருணாநிதியிடம் சுட்டிக்காட்டியபோது, "நாவலரின் போட்டியைத் தவிர்க்க முயற்சி செய்வேன். ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப் பாடுபடுவேன்" என்று அவர் பதிலளித்தார்.

### நெடுஞ்செழியன் பிறந்த நாள்

திரு. நெடுஞ்செழியன் தனது 50வது பிறந்த நாளை கடந்த பதினேராந் தேதி கொண்டாடினுர். அப்பொழுது முதல்வர் கருணாநிதி நேரடியாகச் சென்று அவருக்கு வாழ்த்துக் கூறினுர்.

நெடுஞ்செழியன் பிறந்த நாள்விழாவுக்கு போயிருந்த



பர்கள் விசாரித்தார்கள். பொதுச் செயலாளர் பதவிக்கு முதலமைச்சர் போட்டியிட்டால் அவர் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்றும் அதுதான் கட்சிக் கட்டுப்பாடு என்றும் அவர் கூறினுர். திரு. கருணாநிதியைப் போட்டியின்றி இப்பதவிக்கு தேர்ந்தெடுக்கவேண்டும் என்பது தமது சொந்தக் கருத்து என்று அவர் குறிப்பிட்டார்.

## "இந்து

உடுவில் கல்விப்பகுதி

## தமிழ்த்தின விழா போட்டி முடிவுகள்

உரும்பராய், ஞாயிறு கல்வி நூற்றுண்டு விழாவையொட்டி உடுவில் கல்விப்பகுதியினரால் பாடசாலைகளிடையே நடத்தப்பட்ட தமிழ்த்தினவிழா போட்டிமுடிவுகள்வருமாறு:

**பிரிவு அ:** உறுப்புஎழுத்து: து. கௌசல்யாதேவி, இணுவில் அ. மி. த. க. பாடசாலை; சி. சாரதாதேவி, நவாலி ஸ்த்தான அ. மி. த. க. பாடசாலை; ம. கிரீற்றியன்ரூபா, நவாலி சென் பீற்றர் ரூே. க. த. பாடசாலை.

உரத்துவாசித்தல்: சோ. ஸ்ரீஸ்கந்தராசா, இணுவில் சைவமகாஜன வித்தியாசாலை; வே. பிரேமகுமார், இணுவில் அ.மி.த.க. பா; க. குமுதினி, சுன்ணுகம் கோட்டைக்காடு அ. த. க. பாடசாலை.

பா ஓதல்: சி. லோகா இணுவில் அ. த. க. பா; சி. சிவசங்கர், சுன்ணுகம் இராமநாதன் கல்லூரி; ந. உதயகுமாரி, இணுவில் சை. ம. வித்தியாசாலை.

நாடகம்: இணுவில் சைவ மகாஜன வித்தியாசாலை.

**பிரிவு ஆ:** உறுப்புஎழுத்து: செ. சாந்தினி, இ. அ. மி. த. க. பா; க. சாவித்திரி, சுதுமலை வ. த. க. பா; செ. மேரிஜேசலின், ஆனைக்கோட்டை ரூே. க. த. க. பாடசாலை.

எழுத்துக்கூட்டல்: கு. பிரேமா, உடுவில் மு வி; இ. கலா இந்திரை, சுன்ணுகம் இரா. க; அ. நகுலேஸ்வரி, இணுவில் அ. மி. த. க. பாடசாலை.

உரத்து வாசித்தல்: க. சிவவடிவேல், இணுவில் சை. மகா. வித்; செ. செ. பத்மராசா, மானிப்பாய் இ. கல்; ப. கௌசலா, இணுவில் சை. மகா. வித்.

பா ஓதல்: சோ. ளமைதிலி, சுன்ணுகம் இரா. க; சி. மகாலட்சுமி, இணுவில் அ. மி. த. க. பா; அ. கலாராணி, இணுவில்சை. மகா வி

சொற்பொழிவு: அ. ஸ்ரீதரன், இ. சை. மகா. வி; இ. கணேஸ்வரி; இ. சை. மகா. வி; து. பங்கையச் செல்வி இ. சைவப்பிரகாச வித்தியாசாலை.

நாடகம்: இ. சை. பி. வி; இ. சை. மகா. வி; தாவடி இ. த. க. பா.

**பிரிவு இ:** உறுப்பு எழுத்து: ஆர். இரஞ்சினி: சுன்ணுகம் ஸ்கந்தவரோதய கல்லூரி; இ. க; பி. தயாபரன், சுன். ஸ்கந். க.

கட்டுரை: இ. ஜெகதீஸ்வரி, இ. சை. பிர வித்; க. பூர்ணிமா, சுன். இரா. க; சோ. ஸ்ரீநமசிவாயம், மானிப். இ. க.

உரத்து வாசித்தல்: சி. விமலநாதன், மா. இ. க; ந. அமிர்தலிங்கம், இ. சை. மகா. வி; ச. இரணராஜன், மாணி. இ க.

பா ஓதல்: சி. சிவசக்தி, சுன். இரா. க; க. பாலசுப்பிரமணியம், இ. சை. பிர. வி; ந. மங்கையர்க்கரசி, இ. சை. மகா. வி.

சொற்பொழிவு. இ. புஸ்பயோகேந்திரன், இ. சை. மகா. வி; த. உமாதேவி, தாவடி இ. த. க. பா; சோ. மங்கையர்க்கரசி, இ சை. மகா வி.

நாடகம்: இ. சை. மகா. வி; இ சை. மகா. வி; சுன். ஸ்கந் வ க.

### பாடசாலை புள்ளி நிலை

இணுவில் சை. மகா. வித்தியாசாலை 56, சுன்ணுகம் இராமநாதன் கல்லூரி 29, இணுவில் அமெரிக்கன் மி த க. பாடசாலை 24, இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலை 16, மானிப்பாய் இந்துக்கல்லூரி 13, சுன்ணுகம் ஸ்கந்தவரோதய கல்லூரி 10.

இப் போட்டியில் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் முதலாம் இரண்டாம் இடங்களைப் பெற்ற மாணவர்கள் அவ்வவ் விடயங்களில் இம்மாதம் நடைபெறும் யாழ்ப்பாண மாவட்ட போட்டியில் பங்குபற்ற தகுதி உடையவர்களென உடுவில் பகுதி கல்வி அதிகாரி ச. இராசா அறிவிக்கின்ருர்.

உடுவில் கல்வி வட்டார நூல்நிலைய திறப்புவிழா தினத்தன்று இப் போட்டியில் பங்குபற்றி முதல் மூன்று இடங்களைப்பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும்.

## இடமாற்றத்திற்கு எதிர்ப்பு

பருத்தித்துறை, ஞாயிறு புலோலி எம். எம். பாடசாலை ஆசிரியர் திரு. வி. இராசையா, வியாபாரிமூலை, சைவத் தமிழ்ப் பாடசாலைக்கு மாற்றப்பட்டதைத் தொடர்ந்து எம். எம். பாடசாலைப் பெற்ருர் ஆசிரியர் சங்கம் தொகுதி எம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# காங்கிரஸ்மொழிக் கொள்கை தமிழ்நாடுபிரமுகர்கண்டனம்

பெங்களூர், ஜூலை 13

மத்திய அரசாங்கம் கட்டாய இந்தி கொள்கையைக் கைவிட்டால் அல்லாமல் தமிழ் நாட்டில் காங்கிரஸ் கட்சி முற்றாக அழிந்துவிடும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் கட்சிப் பிரமுகரும் சட்ட மன்ற உறுப்பினருமான திரு. விநாயகம் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

பெங்களூர் காங்கிரஸ்கமிட்டிக் கூட்டத்தில் பேசிய அவர், டில்லிஅரசின்மொழிக் கொள்கையை தமிழ்நாட்டில் தி மு.க.வினர் காங்கிரஸிற்கு எதிராக பயன்படுத்திக்கொள்கிறார்கள் என்றார். இந்தக்கொள்கையை மாற்றிக்கொள்ளாவிட்டால்தமிழ்நாட்டில் காங்கிரஸ் அழிவைத் தடுக்கவியலாது. இந்த கூட்டத்தில்ஆங்கிலம் தெரிந்திருந்தும்கூட இந்தி மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் இந்தியிலேயே பேசினார்கள். நாகர்கோயிலில் காங்கிரஸ் வெற்றிபெற்றதில்காங்கிரஸ் நிலைமை அபிவிருத்தியடைந்து விட்டதாக யாரும் எண்ணிவிடக்கூடாது. அது அவர் தனிப்பட்டமுறையில்பெற்ற வெற்றியே தவிர காங்கிரசுக்கு மக்கள் ஆதரவுபெருகி விட்டதாகச் சொல்லிவிட முடியாது என்றும் கூறினார்.

# சட்ட மாணவர்களிடையே வளரும் தமிழ் ஆர்வம்

வெள்ளவத்தை, ஞாயிறு

'சட்டக்கல்லூரி மாணவர்களிடையே எழுந்துள்ள தமிழார்வத்தையும் அவர்களது பேச்சுத்திறனையும் இன்றைய பேச்சுப்போட்டியிலே காணக்கூடியதாக விருந்தது வெற்றி பெற்றவர்களுக்குச் சமதையாக நின்று மற்றவர்களும் பேசினார்கள். இவை போன்ற போட்டிகள் மாணவரின் திறமை அறிவு, விவாதத் திறன் என்பனவளர்வதற்கு ஏதுவாகும். உண்மையைப் பொய் என்று நிரூபிக்கப் பழகாமல் உண்மையை உண்மை என்றே நிரூபிப்பதற்குச் சட்டமாணவர் பழகிக்கொள்ளல்வேண்டும்.'

இவ்வாறு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த திருமதி ஞானம் இரத்தினம் இலங்கை சட்டக்கல்லூரி மாணவர் தமிழ்மன்றத்தின் எழுந்தமானப் பேச்சுப்போட்டியில் கலந்துகொண்டு பரிசில் வழங்குகையில் தெரிவித்தார்:

திரு டானியல் ஜெகசோதியின் தலைமையில்நடைபெற்ற இப்போட்டியில் முதலிடத்தை திரு. சி. கமலசபேசனும் இரண்டாமிடத்தை திரு. ரி. சச்சிதானந்தனும் பெற்றனர்.

திரு. ரி. நடராசாவும் பிள்ளைகளும் வழங்கிய சேர் வைத்திலிங்கம் துரைசாமி ஞாபகார்த்தப் பதக்கமும் அம்மையார் துரைசுவாமி ஞாபகார்த்தப் பதக்கமுமாகிய தங்கப்பதக்கத்தை திரு. கே. சி. கமலசபேசன் பெற்றார்.

திருமதி சுவாமிநாதனும் பிள்ளைகளும் வழங்கிய திரு. எம். சுவாமிநாதன் தங்கப் பதக்கத்தை திரு. ரி. சச்சிதானந்தம் பெற்றார். மேற்படி போட்டிக்கு மேலதிக மாவட்ட நீதிபதி திரு. ஏ. வைத்திலிங்கம் இராணி வழக்குரைஞர் திரு. வி. நவரத்தினம், திருமதி ஞானம் இரத்தினம் ஆகியோர் நடுவர்களாக கடமையாற்றினர்.

திரு. த. யோகானந்தர் நன்றி தெரிவித்தார்.

## தரிப்புகளில் நில்லாத பஸ்

வல்வெட்டித்துறை, ஞாயிறு

பருத்தித்துறை அல்வாய் தொண்டமானாறு சேவையில் ஈடுபடும் இ. போ. ச. பஸ்கள் அல்வாய் தெற்கில் உள்ளகின்ன ஆலடி என்னும் இடத்திற்கு அண்மையில்பஸ்களை நிறுத்தாமல் போவதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுசம்பந்தமாக பிரயாணிகள் மேலிடத்திற்கு புகார்செய்துள்ளனர்

## சிறைத்தண்டனை

காலி, ஞாயிறு

காலி மாவட்ட நீதிபதி திரு. சி. வி. உடலகம அண்மையில்நடைபெற்ற வழக்கு விசாரணையின்போது சட்டத்துக்கு விரோதமாக கூட்டம்கூடல், களவு போன்ற பல குற்றச்செயல்களில் ஈடுபட்டுள்ளதாகக் குற்றஞ்சாட்டி பி. ஜி. தனபால, ரி. எச். யசபால, ரி. எச். தர்மசேன, எச். பந்துசேன, எச் ஜேமிஸ் ஆகிய நால்வருக்கும் சிறைத்தண்டனை விதித்துள்ளார்.

களை வானவெளிப் பயணத்திட்ட நிர்வாகம் அங்கீகரித்து உள்ளது

'அப்பல்லோ-8' ராக்கெட்டு கடந்த ஆண்டு கிறிஸ்மஸ் வேளையில் சந்திரனை சுற்றிப்பறந்த போது அதில் இருந்த வீரர்கள் வான்கோழிக்கறி சாப்பிட்டார்கள்.

ஆனல் இப்போது அப்பல்லோ-11 பயணத்தின் போது வீரர்கள் பிளாஸ்டிக் பைகளில் அடைக்கப்பட்ட உணவுவகைகளை கரண்டியால் எடுத்துச்சாப்பிடுவார்கள்.

மாட்டு இறைச்சி, தேநீர் கோழிக்கறி, காய்கறிகள் பலவிதமான ரொட்டிகள் காய்கறி உணவுகள் பானங்கள் போன்ற பலவகை உணவுகளில் வீரர்கள் தாங்கள் விரும்பியதை சாப்பிடுவார்கள்.

சுத்தம் செய்யப்பட்டு உலரவைத்துகாற்றுப் புகாத பிளாஸ்டிக் பைகளில் அடைக்கப்பட்ட இந்த உணவுகளில் தண்ணீர் சேர்த்தும் நாம் சாதாரணமாக உட்கொள்ளும் காய்கறிகள் இறைச்சி போலஉப்பிடுயிக்கும்.

ஆட்சித் தலைமையும், கட்சித் தலைமையும் மோதிக் கொள்ளாமல் இணைந்து கருத்து வேறுபாடின்றிச் செயல்படவேண்டும் என்ற காரணத்தினலேயே திரு. கருணாநிதி இந்தப் பதவிக்குப் போட்டியிடவிருப்பதாகத் தெரிகின்றது. பொருளாளர் பதவிக்கு திரு எம். ஜி. ராமச்சந்திரன் போட்டியிடப்போவதாக ஏற்கனவே அறிவித்திருப்பது தெரிந்ததே.

தமிழ்நாடு மந்திரிசபையை

இந்த விசேஷ உணவுகள் பெரும் செலவில் தயாரிக்கப்பட்டு உள்ளன. நாள் ஒன்றுக்கு ஒவ்வொரு வீரருக்கு 1125 ரூபாயில் இருந்து 2250 ரூபாவரை உணவு செலவு ஆவதாக கணக்கிடப்பட்டுள்ளது.

இதுபற்றி உணவு ஆராய்ச்சி நிலைய நிபுணரான திருமதி மேரி கிளிகா நிருபர்களிடையே விளக்கிக் கூறுகையில், "வீரர்கள் தங்களது உணவைச் சுவையுடன் விரும்பி உண்பதாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் இவை தயாரிக்கப்பட்டுள்ளன" என்று கூறினார்.

தேதி கொண்டாடினார். அப்பொழுது முதல்வர் கருணாநிதி நேரடியாகச் சென்று அவருக்கு வாழ்த்துக் கூறினார்.

நெடுஞ்செழியன் பிறந்த நாள்விழாவுக்கு போயிருந்த போழுது கட்சி விஷயங்கள் பற்றி ஆலோசித்தீர்களா என்று நிருபர்கள் வினவிய போது அப்படி எதுவும் விவாதிக்கவில்லை என்று திரு. கருணாநிதி பதில் கூறினார்.

பொதுச் செயலாளர் பதவிக்கு திரு. கருணாநிதி நிற்கப்போவது குறித்து திரு. நெடுஞ்செழியனிடம் நிருபர்கள் கேட்டபோது தமது முடிவில் இம்மியும் மாறுதல் இல்லையென்று கூறினார்.

கட்சி நலனைக் கருதி என்னை ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கச் செய்யவேண்டும் என முதலமைச்சர் கருணாநிதியைக் கேட்டுக்கொள்கிறேன் என்று அவர் கூறினார்.

## பெரியார் கருத்து

தி. மு. க. செயலாளர் பதவிக்கு முக்கிய பிரமுகர்களுக்கிடையில் போட்டியிடுவது குறித்து ஈ. வே. ராமசாமிப் பெரியாரிடம் நிரு

தேர்ந்தெடுக்க வேண்டும் என்பது தமது சொந்தக் கருத்து என்று அவர் குறிப்பிட்டார்.

## "இந்து சமுத்திரத்தில் யு எஸ். தளம் வேண்டாம்"

நியூயோர்க் ஜூலை 13

இந்துசமுத்திரத்தில் கடற்படைத் தளங்களை அமைக்க வேண்டாம் என்று அமெரிக்காவை இந்திய வெளியுறவு அமைச்சர் தினேஷ் சிங் கேட்டுக்கொண்டிருக்கிறார். இந்தப் பகுதியில் ஒரு வல்லரசு தலையிட்டால் மற்ற வல்லரசுகளும் வருவதற்கு முயற்சிசெய்யக்கூடும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

வல்வெட்டித்துறை ஞாயிறு

பருத்தித்துறை பத்திரகாளி அம்மன் கோவிலில் நேற்று இரவு பலரூபா பெறுமதியான பொருட்கள் களவுபோய்விட்டதாம். இது சம்பந்தமாக பொலீசார் புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

வித்தியாசாலை.

நாடகம்: இ. சை. பி. வி; இ. சை. மகா. வி; தாவடி இ. த. க. பா.

பிரிவு இ: உறுப்பு எழுத்து: ஆர். இரஞ்சினி: சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரி, சா. ரேஸ் இராசகுலவதி: சுன்னாகம் இராம. க; சோ. தவநேருமலர், இ. சை. மகா. வித்தியாசாலை.

எழுத்துக்கூட்டல்: பொ. மேரி றேச்சல் யோலின், சுன். இரா, க; எஸ். ஆனந்தகுமார், மானிப்பாய்

## இலங்கை தூதரும் பார்ப்பார்

வாஷிங்டன், ஜூலை 13

அப்பல்லோ-11விண்வெளிக்கு செலுத்தப்படுவதைப் பார்க்க விருக்கும் வெளிநாட்டு ராஜதந்திரிகளில் இலங்கை தூதுவரான திரு. ஒலிவர் வீரசிங்கவும் ஒருவராய் இருப்பார்.

தற்பொழுது அமெரிக்காவிலிருக்கும் இந்திய வெளி உறவு அமைச்சர் திரு. தினேஷ்சிங் கேப்கென்னடியில் அடுத்த 16-ம் திகதி அப்பலோ-11 விண்வெளிக்கு செலுத்தப்படுவதைப் பார்ப்பார்.

புலோலி எம். எம். பாடசாலை ஆசிரியர் திரு. வி. இராசையா, வியாபாரிமூலை, சைவத் தமிழ்ப் பாடசாலைக்கு மாற்றப்பட்டதைத் தொடர்ந்துஎம். எம். பாடசாலைப்பெற்றோர் ஆசிரியர் சங்கம் தொகுதி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் மூலம்வடமாநிலக் கல்வியதிபதி திரு. எஸ். தணிகாசலத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. வருட நடுப்பகுதியில் இம்மாற்றம் நடக்கவிருப்பதாலும், ஏற்கனவே இப்பாடசாலையில் வெற்றிடங்கள் இரண்டு இருப்பதாலும் இம்மாற்றம் அர்த்தமற்றதென்று பெற்றோர்- ஆசிரியர் சங்கம்சுட்டிக் காட்டியுள்ளது.

## பள்ளிவாசல் புனருத்தாரணம்

அல்லைப்பிட்டி, ஞாயிறு

பிரசித்தி பெற்ற பள்ளிவாசலாகிய வேலணை வெள்ளைக் கடற்கரை புனிதபள்ளிவாசல் புனருத்தாரண வேலைகள் பல ஆயிரக்கணக்கான ரூபா செலவில் நடைபெற்று வருகின்றது. வெகுவிரைவில் தொழுகைக்காக இது திறந்துவிடப்படவிருக்கின்றது.


நெற் கிருமிப் பீடைகள் யாவற்றையும் அறவே ஒழிக்க உபயோகியுங்கள்

'என்றெக்ஸ்' 20

என்றின் என்னும் பொருளின் வலுமிக்க உருவம்




நெற் பீடைக் கிருமிகள் எத்தனையோ. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு வகையான, விலையுயர்ந்த கிருமிநாசினிகள் சிபார்சு செய்யப்படுகின்றன. ஆனல் நெற் பயிரைத் தாக்கும் எல்லா வகைக் கிருமிப் பீடைகளையும் சிக்கனமாக அறவே அழிக்க வல்லதென்று நிரூபிக்கப்பட்ட கிருமிநாசினி ஒன்றுதான் உண்டு. இத்தகைய சஞ்சீவி மருந்தே 'என்றெக்ஸ்' 20. இது நெற் கிருமிப் பீடைகள் யாவற்றையும் போகத்துக்குப் போகம், வருடத்துக்கு வருடம் வெகு செம்மையாகக் கட்டுப்படுத்த வல்ல கிருமிநாசினியெனப் பயிர்ச் செய்கையாளர்கள் மீண்டும் மீண்டும் நிரூபித்துள்ளார்கள். சேற்று நில நெற்காணிகளிலும் மேட்டு நிலக் காணிகளிலும் இலங்கையிலும் நெல் விளையும் உலகின் எல்லாப் பாகங்களிலும் இவ்வாறு நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

உங்கள் நெற்பயிரை எல்லா வகையான கிருமிப் பீடைகளிடமிருந்தும் காப்பாற்றுவதற்கு பயிர் 10-14 நாள் வளர்ச்சியடைந்திருக்கும் பருவத்தில் நன்றாக 'என்றெக்ஸ்' 20 தெளிக்கத் தொடங்குங்கள். பின்னர் மாதம் ஒரு முறை தெளித்து வரவும். 2 கலன் நீருக்கு 1 திரவ அவுன்ஸ் 'என்றெக்ஸ்' 20 வீதம் கலந்த 32-40 கலன் தெளி திரவத்தை ஓர் ஏக்கருக்குத் தெளிக்கவும். இதற்காகும் செலவு, உபயோகிக்கும் அளவுப் பிரமாணத்தையும் கொள்வனவு செய்யும் அளவையும் பொறுத்து, ஏக்கருக்கு ஒரு முறைக்கு ரூ. 6/- முதல் ரூ. 10/- வரை அமையும். பீடைகளின் தொல்லையற்ற ஆரோக்கியமான பயிரும் அமோக விளைச்சலும் கிடைப்பதற்கு இது அற்ப செலவே.

'என்றெக்ஸ்' 20 முத்திரிக்கையிட்ட, கலப்படஞ் செய்ய இடமளிக்காத 16 திரவ அவுன்ஸ் போத்தல்களிலும் 1, 4, 45 கலன் கலங்களிலும் கிடைக்கும்.

ஷெல் ரசாயனப் பொருட்கள்

SHELL

### மணிவாக்கு

விஞ்ஞான அற்புதங்களைக் கண்டுபிடித்தவர்கள் கூட கடவுள் நம்பிக்கை, பிரார்த்தனை ஆகியவற்றை தங்கள் வாழ்க்கையில் இருந்து அகற்றிவிடவில்லை. கடவுள் நம்பிக்கையும், பிரார்த்தனையும் இல்லாத தொழில்கள், மணமற்ற செயற்கை, மலர்களைப் போன்றவை.

—மகாத்மா காந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389,

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் ஆடி மாதம் 30-ந் திகதி (14-7 69)


## 'சூப்பர் மார்க்கட்'

'நான் சந்நியாசியாகப்போகிறேன்' என்று ஒருவர் சொல்லுகிறார் இதற்கு மற்றவர் 'சூப்பர் மார்க்கட்டுக்குப் போகலாமே' என்று பதிலளிக்கிறார். 'ஆமாம் அங்குதான் போகிறேன்; காஷாயமும் கமண்டலமும் வாங்குவதற்கு' என்று முதலாமவர் பதிலளித்துச் செல்கிறார்.

தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் பிரபல வாரப்பத்திரிகையொன்றில் வெளிவந்த விகடத் துணுக்குத்தான் மேலேயுள்ள சம்பாஷணை. 'சூப்பர் மார்க்கட்டில் சகல பொருள்களும் கிடைக்கும்; நியாயமான விலைகளில் அவற்றைப் பெறலாம் என்பதை எடுத்துக்காட்டத்தான் இதைஇங்கு குறிப்பிடுகிறோம். சென்னை 'மூர்மார்க்கட்' பிரசித்தமானது. ஆனாலும் அங்கு தரகர் தொல்லையுமுண்டு விலைகளும் நிதானமில்லை. ஆனால் 'சூப்பர் மார்க்கட்டில்' சகல பொருள்களும் தட்டுப்பாடில்லாமல், தரகர் தொல்லையுமில்லாமல் நியாயமான விலைகளில் கிடைக்கின்றன

'யாழ்ப்பாணத்தில்ஒரு 'சூப்பர் மார்க்கட்' நிறுவப்படவேண்டுமென்றும் யாழ்ப்பாண நகரில் அமைக்கப்படும் நவீன சந்தைக் கட்டிடத்தில் 'சூப்பர் மார்க்கட்' நிறுவுவதற்கு யாழ்ப்பாண மாநகர சபை ஒழுங்குசெய்து கொடுக்கவேண்டுமென்றும் யாழ்ப்பாணத்தில் நடந்த கூட்டுறவு தினவிழாவில் யோசனைதெரிவிக்கப்பட்டது.

தமிழ்நாட்டின் தலைநகரான சென்னையில் 'காமதேனு' என்னும்பெயரில் நிறுவப்பட்ட 'சூப்பர் மார்க்கட்' பொதுமக்களின் ஆதரவையும் நம்பிக்கையையும் பெற்றுள்ளதாலும் அங்குதினசரி செல்லும் மக்கள் கூட்டத்தைச் சமாளிக்கமுடியாததாலும், நகரின் வேறுபகுதி மக்களுக்கும் சகல பொருள்களும் நியாயமான விலையில் கிடைக்க வேண்டுமென்பதா... செய்கின்றன. ஆனாலும்சகல பொருள்களையும் ஒரே இடத்தில்வாங்கக்கூடியவசதியோ அத்தியாவசியப் பொருள்கள் தட்டுப்பாடில்லாமல் கிடைக்கும் நிலையோ இல்லை. உள்ளூரில் உற்பத்தியாகும் பொருள்களைக்கூட நியாயமான விலைகளில் பெறமுடியாது. தனியார் நிறுவனங்களில் அதிக விலைகொடுத்துவாங்கக்கூடியதாக இருக்கும். அத்தியாவசியப் பொருள்கள் இந்தக் கூட்டுறவுக் கடைகளிலோ அரசாங்கக் கட்டுப்பாட்டின் கீழுள்ள இலாகாக்களிலோ வாங்கமுடியாத நிலை இன்னும் இருக்கத்தான் செய்கிறது.

உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் காய்கறிகள் தானிய வகைகள் மற்றும்வீட்டுப்பாவனைக்குரிய பொருள்கள், ஜவுளிகளும் அவற்றை உற்பத்தி செய்பவர்களிடமிருந்து மிகக் குறைந்த விலைகளில் வாங்கப்படுகிறது. ஆனால் அவை பொதுமக்களுக்கு அதிக விலைகளிலேயே கிடைக்கின்றன. உற்பத்தியாளருக்கும் பாவனையாளருக்கும் கஷ்டமும், நஷ்டமும் ஏற்பட 'சும்மா இருக்கும்' தரகர்கள் பெருந்தொகையைச் சுருட்டிக் கொண்டு போகிறார்கள்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கூட்டுறவு இயக்கம் நல்ல முறையில் வளர்ந்துள்ளது. (இந்த இயக்கத்தில் இப்போது சில சீர்கேடுகள் நிலவுவதாகப் புகார் கூறப்படுகிறது இதில் உண்மையில்லையென்று கூறிவிடமுடியாது கூட்டுறவு இயக்கத்தில் களையெடுப்பு நடத்தி அதைச் சீர்படுத்துவது பெரும் கஷ்டமல்ல )இங்குள்ள கூட்டுறவுச் சங்கங்கள், சம்மேளனங்கள் ஒன்றுசேர்ந்து யாழ்ப்பாண நகரில்உருவாக்கப்படும்நவீன சந்தைக் கட்டிடத்தின்ஒருபகுதியை, 'சூப்பர் மார்க்கட்' அமைப்பதற்கு முன்வந்து காரியமாற்றவேண்டும். அரசாங்கமும் இதற்கு ஆதரவும்

## இன்று கதிர்காமம் கொடியேற்றம்

# கந்தன் இருக்கும் மலை காண்பதுவும் எந்நாளோ

— சுப்புடு —

கந்தசாமிப்பிள்ளைக்கு நேற்றிரவு முழுவதும் நித்திரையில்லை. உருண்டு புரளுவதும், கோழித் தூக்கம் தூங்குவதுமாகக் கனவு கண்டுகொண்டேயிருந்தார். அவருக்கு இப்பொழுது வயது எண்பத்தாறை எட்டிப்பிடித்துவிட்டது. தள்ளாத காலம். நரை, திரை மூப்பு எல்லாம் சேர்ந்து கொண்டன.

முன் வீட்டுக்காரர் பிளேனில் கொழும்புக்குப் போய் அங்கிருந்து டாக்ஸி பிடித்துக்கொண்டு கதிர்காமம் போகப்போகிறதாகக் கேள்விப்பட்ட நேரம் தொடக்கம் கந்தசாமிப்பிள்ளைக்கு என்னவோ செய்தது. கதிர்காமத்தானைக் காண ஆசை. ஆனால் போவதற்கு வழியில்லை. ரயிலில் போய்வருவதற்கும் வசதியில்லாமல போய்விட்டது.

கதிர்காமக் கந்தனிடமிருந்து ஒருகாலம் தமக்கு அழைப்பு வந்ததைப் பற்றி நினைத்துச் சுவைத்தபடியே அரைத் தூக்கத்திலிருந்தார்.

அந்தக் காலத்தில், அதாவது சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன்பு எல்லோரும் அவருடைய அழைப்புக் கிடைத்த பின்னரே கதிர்காம யாத்திரை போவார்கள். கதிர்காமம் போகவேண்டும், போக வேண்டும் என்று, நந்தனார் சிதம்பரம் போக நினைத்தது போல, ஆவல் மீறியிருக்கும் சமயத்தில் அப்பன் ஏதாவதொரு வழியில் அழைப்புக் கொடுப்பார். கந்தசாமிப்பிள்ளைக்கு அந்த அழைப்பு ஒரு நாள் இரவு கனவில் வந்தது. எட்டு வயதுக் குழந்தை ஒன்று அவருக்குப் பிரத்யட்சமாகி ''நீ ஏன் வீட்டை வரவில்லை'' என்று கூறியது. தங்கப்பதுமை போன்ற அந்தப் பாலகன் திருமுருகன் தான் என்பதை உணர்ந்துகொண்ட கந்தசாமிப்பிள்ளை அடுத்த கதிர்காம யாத்திரைக்கு ஆயத்தமாகிவிட்டார்.

வீட்டிலே மச்சம், மாமிசம் சாப்பிடுவது நிறுத்தப்பட்டது. தினமும் அருகிலுள்ள வைரவகோயிலுக்குப் போய் இரண்டு நேரமும் கற்பூரம் கொளுத்தித் தேங்காய் உடைத்து வணங்கினார். தலைமுடியும், தாடியும் நீண்டு வளர்ந்தன. கந்தசாமிப்பிள்ளைக்குக் கந்தனுடைய அழைப்புக் கிடைத்ததைக் கேள்விப்பட்ட ஊரவர்கள் தாங்களும் பலவிதமான காணிக்கைகளைக் கொண்டுவந்து அவரிடம் ஒப்படைத்தனர்.

கதிர்காமம் கொடியேற்றத்துக்கு இரண்டு மாதங்கள் முன்பே கந்தசாமிப்பிள்ளை வைரவ கோவிலில் பொங்கலும் பூஜையும் செய்து ஊர்ச் சனங்களின் 'கதிர்காமத்தானுக்கு அரோஹரா' என்ற கோஷம் கிளம்ப, மனைவி மக்களிடம் விடை பற்றுக்கொண்டு கால்நடையாகப் புறப்பட்டார் கதிர்காம யாத்திரை

வழியில் வேறு பல 'சாமி'களும் சேர்ந்துகொண்டார்கள். கதிர்காமத்துக்குப் போகிறவர்கள் எல்லாருமே 'சாமி'கள்தாம். எவரும் பெயர் சொல்லி அழைப்பதில்லை. யாழ்ப்பாணத்திலிருந்து போகும் வழிகளெல்லாம் அன்பர்கள் 'சாமி'களை வரவேற்று அன்னதானம் செய்தார்கள். இரவு நேரங்களில் அவர் கோயில்களில் படுத்துறங்குவார்.

யாழ்ப்பாணத்திலிருந்து நேரே வவுனியாவுக்குப் போய், அங்கிருந்து ஹொரவப்பொத்தானை வழியாகத் திருக்கோணமலை சென்று, அங்கே கோணேஸ்வரர் ஆலயத்தில் இரண்டு நாட்கள் தங்கிவிட்டு அப்படியே மட்டக்களப்பு அடைந்து, அமிர்தகழி ஆலயத்தில் இரண்டு நாட்கள் தங்கி, மறுபடியும் கால்நடையாகப் புறப்பட்டுக் கிழக்கு மாகாணக் கரையோரமாகப் பொத்துவில் சென்று காட்டு வழியாகச் நடந்துசென்றார். கரடியும், புலியும், யானையும் சஞ்சரிக்கும் பொல்லாத ஆரண்யம். முருகன் திருநாமத்தின் முன்பு அவை எவ்விதமான தீங்கும்செய்ய மாட்டா என்ற திடமான நம்பிக்கை 'சாமி'களுக்கு உண்டு.

துஷ்ட மிருகங்கள் சமீபித்தவுடனேகதிர் காமத்தானின் நாமத்தை உச்சரிக்க வேண்டியதுதான் தாமதம், அவை கிட்டவும் அணுக மாட்டா. இரவு இரவாகச் 'சாமி'கள் கதிர்காமககாதல் பாடிக்கொண்டிருப்பார்கள்.

'அந்த மலை இந்த மலை
அண்ணாந்து பார்க்கும் மலை!
கந்தன் இருக்கும் மலை
காண்பதுவும் எந்நாளோ!'
'அட்டைக் கடியும் அரிய
வழி நடையும்
கட்டை இடறுதலும்
காணலாம் கண்டியிலே'!

இப்படியாகவே கதிர்காமம் போய்ச் சேர்ந்தவுடனே மாணிக்க கங்கையில் மூழ்கியெழுந்து தலைமுடியும் தாடியும் வழித்து, அப்பனைத் தரிசித்து, பின்பு செல்லக் கதிர்காமம் முதலிய ஸ்தலங்களுக்கும் சென்றுவிட்டு, மீண்டும் தீர்த்தம் முடிந்தபின் கால்நடையாகவே வீடு வந்து சேருவார் கந்தசாமிப்பிள்ளை.

இப்பொழுது பிளேனில் போகிறார்களாம், முருகா! என்று சொல்லிக்கொண்டு கந்தசாமிப்பிள்ளை புரண்டு படுத்துப் பெருமூச்செறிந்தார்.

### பஸ்தரிப்புநிலையம்

அல்லைப்பிட்டி ஞாயிறு வேலணைக் கிராமசபை எல்லைக்குட்பட்ட பகுதி மக்களுக்கு பஸ்தரிப்பு நிலையம் இல்லாதது பெருங் குறையாகவுள்ளது. பஸ்தரிப்பு நிலையம் இல்லாதகினால் இப்பகுதி மக்கள் மிகுந்த சிரமத்துக்குள்ளாகிறார்கள்.

## 38 வருட ஆசிரியத் தொண்டு செய்து இளைப்பாறும் அதிபர்

ஒரு பாடசாலையின் முன்னேற்றத்திற்குப் பல காரணங்கள் இருப்பினும், முக்கிய காரணம் அப்பாடசாலைஅதிபரது சேவையேயாகும். திறமான அதிபர்களின் சேவையினால் எத்தனையோ பாடசாலைகள் உயர்வு பெற்றமையை நாம் கண் கூடாகக் காண்கின்றோம்.

சந்திரபுரம் ஸ்கந்தவரோதய மகாவித்தியாலய உயர்வுக்கு உழைத்து வந்த அதிபர்களைத் தொடர்ந்து சென்ற பன்னீராண்டு வித்துவான் க. நடராசா செய்த சேவை மணிமுடி போன்றது எனலாம் கட்டிட வகையிலும் கல்வி வளர்ச்சி வகையிலும் அவர் செய்த சாதனைகள் மகத்தானவை. அவர் 1958-ம் ஆண்டு ஜனவரி மாதம் இப்பாடசாலையின் பொறுப்பேற்றதுமே இது மகாவித்தியாலயமாக உயர்ந்தது. மகாவித்தியாலயத்தைப் பல துறைகளிலும் முன்னேற்றுவதற்கு



கடமைகளைச் செய்வதில் காட்டி வரும் ஆர்வம் என்னை வெகுவாகக் கவர்ந்துள்ள . அதிபர், ஆசிரியர், பெற்றோர் ஆகியோரிடையே மிக அந்நியோன்யமான நிலை நிலவுவதால் இப்பாடசாலையில் கல்வி பயிற்றல் எளிதாகவும் மகிழ்ச்சி நிறைந்ததாகவும் இருக்கிறது.'' — வி. துரைசிங்கம், வித்தியாதிபதி (21-7-62).

# தென்றல் விடு தூது

## ஐயாறன் மூதுவத

''எல்லாம் எப்போதோ முடிந்த காரியம் ஒரு பொல்லாப்புமில்லை'' என்று யாழ்ப்பாண முனிவரான யோக சுவாமிகள் கூறுவதுண்டல்லவா? அவர் கூறியதையே தாம் விளக்குவதாயும் புதிதாக ஒன்றும் சொல்லவில்லை என்றும் மதுரை ஆதீனம் குருமகா சந்நிதானம் அவர்கள் பலகூட்டங்களிலும் தெரிவித்தார்கள்.

இங்கு நம்மில் யாரும் நமது இஷ்டப்படி பிறக்கிறோமா? அல்லது விருப்பப்படி இறக்கத்தான் முடிகிறதா? இரண்டுமில்லை. பிறப்புக்குமுன் எப்படி இருந்தோம்? இறப்பு குப்பின் என்ன? என்பதெல்லாம் பலருக்கும் ஒரே புதிராக இருக்கிறது. இரண்டும் எந்தச் சமயத்தைச் சார்ந்தவர்களாயிருப்பினும் எல்லாரின் சிந்தனையையும் தூண்டக்கூடிய கேள்விகள்.

0 0 0

மனிதராகப் பிறந்த எல்லாருடைய கைகளிலும் கோடுகள் கிறுக்கப்பட்டுள்ளனவல்லவா? ஒவ்வொருவருக்கும் வெவ்வேறுரேகைகள். அது சாதாரணமாகப் புரியாத ஷார்ட்ஹான்ட்' (சுருக்கெழுத்து). அதுஎன்ன தெரியுமா? ஆண்டவன் நமக்கு அளித்துள்ள தீர்ப்பாகும். அந்தத் தீர்ப்புடனேயே இங்கு எல்லாரும் பிறந்துள்ளோம். முற்பிறவியிலேயே செய்த நல்வினை தீவினைக்குத் தக்கபடி அந்தத் தீர்ப்புமிருக்கும். நல்வினை செய்திருப்பின், நல்ல குடும்பத்தில் நல்ல நிலையில் பிறக்கக்கூடியதாக இருக்கும். முன்னர் தீவினை அதிகம் செய்திருப்பின், அங்கவீனர்களாகவோ, வறியவர்களாகவோ பிறக்கநேரிடும்.

ஒரே ஒரு பிறவிதான் உண்டு என்று கூறுபவர்கள் உலகில் பிறப்பிலேயே உள்ள கூன், குருடு முதலிய வேறுபாடுகளுக்கு என்ன நியாயம் கூறமுடியும்? கடவுள் கருணையுள்ளவரானால் ஒருவரை நல்ல நிலையிலும் மற்றவரை அங்க ஈனராகவும் பிறக்கச் செய்யலாமா? ஏன் இந்தப் பாரபட்சம்? என்று வாலிபர்கள் கேட்கிறார்கள். 'அது கடவுளின் இஷ்டம். அதைப்பற்றி எதுவும் கேட்க நாம் யார்? என்று பதில் அளிப்பதாயின் ''அவ்வித பாரபட்சமுள்ள 'டாம்பிளடி' கடவுள் எங்களுக்குத் தேவையில்லை'' என்று பகுத்தறிவு வாதிகள் கூறிவிடலாம்,

யும்படி விளக்கியுள்ளார்

''இறந்தவர்கள் வாழும் நிலையும், பேசும் முறையும் என்று அவர் தமிழில் புத்தகம் எழுதியதின் நோக்கம் மக்களுக்கு முன் பிறவி உண்டு. இறந்தபின் வாழ்க்கை உண்டு நல் வினை தீவினைப் பயன்கள் உண்டு என்ற நம்பிக்கையையும், தெய்வபக்தியால் இவ்வுலக வாழ்க்கைப் பிரச்னைகளெல்லாம் தீரமுடியுமென்றும். இறந்தவர்களைப்பற்றி யாரும் கவலைப்படாதிருக்கச்செய்யவுமேயாகும்.

ரேகை சாஸ்திரம், நாடி முதலியவற்றைப்பற்றிப் பேசும் அவர், தமது கைரேகையை யாரிடமும் இதுவரை காட்டியதில்லையாம். எதிர்காலத்தைப்பற்றி அறிய கவலைப்படவேண்டாமென்றும், எல்லாம் கருணையுள்ள கடவுள் பார்த்துக் கொள்வாரென்றும், இந்தப் பிறவியில், பிறருக்கு உபகாரம் செய்தால், அதுவே மறுபிறவிக்கு எடுத்துச்செல்லும் 'டிராப்ட்' ஆகுமென்றும் குழந்தைகள் உள்ளிட்டு கேட்போர் அனைவரின் மனதிலும் மாறிப் பசுமரத்தாணிபோல பதியும்படி கூறி, சைவசமயத்தின் மாண்பினை அறிவுறுத்துகின்றார்.

அவர் இறந்தவருடன் பேசுவதுபற்றி எழுதியுள்ள புத்தகங்கள் எல்லாம் மலைநாட்டில் விலைபோய்விட்டன. அதைப்பற்றித் தெரிந்துகொள்ள மக்களுக்கு எவ்வளவு ஆவல்! அந்த நூலை ''ஈழநாடு'' பத்திரிகையில் வெளியிட அனுமதியளிக்க வேண்டுமென்று கேட்டதும் உடன் அன்புடன் சம்மதமளித்தார்கள்பணம்சேர்க்க வேண்டுமென்ற நோக்கம் சிறிதுமில்லையென்றும், மக்கள் உண்மையை உணர்ந்து தெய்வநம்பிக்கையுடன் நல்வாழ்வு வாழ்ந்து உய்ந்தால் அது போதுமென்றும் தெரிவித்தார்கள்.

0 0 0

மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்,
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலை, கண்ணில்
லஃகுறு கழுமலவளநகர்,
பெண்ணில் நல்லாளொடும்
பெருந்தகை இருந்ததே.

—திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்.

## களவுபற்றி அடிக்கடி புகார்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

செல்லும் மக்கள் கூட்டத்தைச் சமாளிக்கமுடியாததாலும், நகரின் வேறுபகுதி மக்களுக்கும் சகல பொருள்களும் நியாயமான விலையில் கிடைக்க வேண்டுமென்பதாலும் சமீபத்தில் 'காவேரி' என்ற பெயரில் சென்னை நகரின் மற்றொரு புறத்தில் இரண்டாவது 'சூப்பர் மார்க்கட்' திறக்கப்பட்டிருக்கிறது.

இலங்கையில் கூட்டுறவு மொத்த விற்பனவு இலாகாகிளைகள், 'மார்க்கட்டிங் டிப்பார்ட்மென்ட்'எனப்படும் விற்பனவு இலாகாக் கிளைகள், இவைதவிர 'லக்சலா' எனப்படும் உள்ளூர் உற்பத்திப் பொருள் விற்பனவுநிலையங்களும் நாட்டின் பல இடங்களிலும் நிறுவப்பட்டிருக்கின்றன. கண்டியில் நவீன சந்தையும் நல்ல முறையில் அமைக்கப்பட்டு சிறப்பாக நிர்வகிக்கப்படுகின்றது

யாழ்ப்பாணத்தில் கூ.மொ.வி. கிளைகள், விற்பனவு இலாகா கிளை, 'லக்சலா' கிளை ஆகியவைகள் இருக்கத்தான் நகரில்உருவாக்கப்படும்நவீன சந்தைக் கட்டிடத்தின்ஒருபகுதியை, 'சூப்பர் மார்க்கட்' அமைப்பதற்கு முன்வந்து காரியமாற்றவேண்டும். அரசாங்கமும் இதற்கு ஆதரவும் உதவியும் அளிக்காமலிருக்க முடியாது. அத்தியாவசியப் பொருள்கள் உட்பட சகல பொருள்களும் ஒரே இடத்தில்-ஒரே கூரையின்கீழ்-நியாயமான விலையில் சகலருக்கும் கிடைப்பதாக இருந்தால், பொருள்களுக்குத்தட்டுப்பாடுஇல்லாதுபோவதுடன், விலைவாசி உயர்வும் கட்டுப்படுத்தப்பட்டுவிடும். கூட்டுறவு விழாவில் யோசனை தெரிவிக்கப்பட்டதுடன் நின்றுவிடாது யாழ்ப்பாண நகரில் 'காமதேனு' போன்று ஒரு கற்பக தருவை'யோ வேறெந்தப் பெயரைக்கொண்டோ 'சூப்பர் மார்க்கட்' ஒன்றை நிறுவ துரித முயற்சிசெய்ய கூட்டுறவு இயக்கத்தினர் முன்வரவேண்டும். பொதுமக்கள், மக்கள் பிரதிநிதிகளின் ஆதரவும் உதவியும் தேவை.

அனலைதீவு கி. ச.

## தலைவர் தெரிவுக்கு கோரம் இல்லை

அனலை தீவு, ஞாயிறு

நேற்று நடைபெறவிருந்த அனலைதீவு கிராமசபைத் தலைவர் தெரிவு கோரம் இல்லாததால் காலவரையின்றி பின்போடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. 7 அங்கத்தவர்களைக் கொண்ட இந்தக் கிராமசபையில் 3 அங்கத்தவர் மட்டுமே தலைவர் தெரிவுக்கு சமுகமளித்திருந்தனர்.

7ம் வட்டார அங்கத்தவர் திரு. சு. தயாபரராசா, 6ம் வட்டார அங்கத்தவர் க. வேலாயுதம், 1ம் வட்டார அங்கத்தவர் திரு வ கந்தையா ஆகியோரே தலைவர் தெரிவுககு வந்திருந்தனர். திருவாளர்கள் பே. கணபதிப்பிள்ளை, நா அமுதலிங்கம், வே. மயில்வாகனம் ஜ. சபாபதிப்பிள்ளை ஆகியோர் சமுகமளிக்கவில்லை. தேர்தலை நடாத்துவதற்கு உள்ளூராட்சி மன்ற அதிகாரிகள் வந்திருந்தனர்.

## மக்கள் கஷ்டம்

பூநகரி, ஞாயிறு

பூநகரி, கிளிநொச்சி வீதியில்இருந்து செல்வியா தீவு என்னும் கிராமத்திற்குச் செல்லும் பிரதான வீதியில் மதகு உடைவு ஏற்பட்டுள்ளதால் அப் பாதையால் வாகனங்கள் போகக்கூடாதென பகிரங்க வேலைப்பகுதியினரால் தடைஉத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாயினும் அதனருகே தற்காலிக வீதி அமைக்கப்படாததால் இப்பகுதி மக்கள் மிகவும் கஷ்டம் அனுபவிக்கின்றனர். விவசாயிகள் பசளைகளை கமங்களுக்கு எடுத்துச் செல்லமுடியாமல் கஷ்டமுறுகின்றனர்.

## தேவை

பிரபல தினசரிப் பத்திரிகையொன்றுக்கு விளம்பரம் சேகரிப்பதற்கும், பிரபல அச்சகம் ஒன்றுக்கு அச்சடிப்பு வேலைகள் தேடிக்கொடுப்பதற்கும் கவர்ச்சியாகப் பேசி காரியம் சாதிக்கும் ஆற்றலுள்ளவர்கள் தேவை. — விளம்பர இலக்கம் 1651 மே /பா. ஈழநாடு, த. பெ. எண். 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு மனுச்செய்யவும்.

1651

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969ம் ஆண்டு ஜூலை மாதம் 14ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தென்றல் விடு தூது

— திமிலைக்கண்ணன் —

வண்ண மயிலேறும் வடிவேல் முருகனைப் போய்
வரச் சொல்லுவாய் தென்றலே — அவன்
எண்ணத்தினால் நிதமும் ஏங்கித் தவிப்பதெல்லாம்
எடுத்துரைப்பாய் தென்றலே

கோழிக் கொடியோனைக் கூவிக் கூவி யழைத்தென்
குறை சொல்லுவாய் தென்றலே நீ
ராழித் துயில்கொள் அரங்கன் மருகனைப் போய்
அழைத்துவா நீ தென்றலே.

வான்போல் அருள்சொரியும் வடிவேல் முருகனை
வரச் சொல்லுவாய் தென்றலே — இங்கென்
ஊன்போய் உடல்சோர்ந் துள்ளம் துடிப்பதனை
உரைத்து வா நீ தென்றலே!

காமத் துயரக் கடலுட் தவிக்குமென்னை
கரை யேற்றுவாய் தென்றலே — கதிர்
காமக் கடவுள் கந்தனிடம் சென்றென
காதலைச் சொல் தென்றலே!

பொதிகையிலே பிறந்து புதுத்தழைத் தழுவிப்
புகழ்ந்து வரும் தென்றலே வான்
மதியம் எழுந்து மறைந்து விடுமுன்னே
முருகனை வரச் சொல்லுவாய்.

★

# ஆன்மாக்களுக்கு அருளும் தான்தோன்றி ஈசுவரர்

— கவிஞர் முருகசூரியன் --

(புதுக்குடியிருப்பு)

மட்டவிழும் மாமலர்கள் மல்குமுயர் கானகத்தில்
இட்டமுடன் வாழ்வுகொளும் எந்தைபிரான் - ஒட்டு சுட்டான்
தான்தோன்றி ஈசுவரன் தண்ணளிசேர் தன்னேக்கால்
ஆன்மாக்க ளுக்கருள்வார் அண்டு. (1)

பொன்னென மின்னும் எங்கள்
பொழில்மலி ஈழ நாட்டில்
வன்னியன் என்னும் மன்னன்
மாண்புற ஆட்சி செய்த
வன்னியம் பதியைச் சார்ந்த
வளவிள ஒட்டு சுட்டான்
மன்னுநான் தோன்றி ஈசன்
மலரடி வழுத்து வோமே! (2)

நலம்பொலி நாரி சேர
நாடொறுந் தமது தூய
மலரடி வழுத்து வோர்க்கு
மாபெருங் கருணை கூர்ந்து
நிலமிசை நீடு வாழ
நின்றருள் புரிவார்; வன்னித்
தலம்திளிர் ஒட்டு சுட்டான்
தான்தோன்றி ஈச னுமே! (3)

[ஒட்டுசுட்டான் தான்தோன்றி, ஈசுவரர் ஆலய வருடாந்த உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது]

...ரி மாதம் இப்பாடசாலையின் பொறுப்பேற்றதுமே இது மகாவித்தியாலயமாக உயர்ந்தது. மகாவித்தியாலயத்தைப் பல துறைகளிலும் முன்னேற்றுவதற்கு அயராது உழைத்தார். விஞ்ஞானகூடம் ஒன்று அமைத்து அதற்கு வேண்டிய உபகரணங்களையும் பெற்றார். மாணவர் கற்பதற்கான மண்டபங்களைக் கட்டுவித்தார். திறந்த வெளியரங்கு ஒன்றை ஆக்கினார். எல்லாவற்றிற்கும் மேலாக மேன்மாடத்தோடு கூடிய ஒரு பெரிய மண்டபத்தை முற்றுவிக்க பெரும் பிரயாசம் எடுத்தார். தாமே வீடு வீடாகச் சென்று பணை சேகரித்தார். இறுதியில் ஆசிரியர், பெற்றார், மாணவர் உதவி கொண்டு முற்றுவித்தார். இதனால் அரசினர் கொடுத்த பணத்திலும் ஒன்றரை மடங்கு பெறுமதியானகட்டிடம் கட்ட முடிந்தது. மாணவர் தண்ணீர் குடிப்பதற்கு இலகுவாக குழாய்நீர் வசதி ஏற்படுத்தினார். விளையாட்டு மைதானத்தில் நடப்பவைகளை வசதியாக இருந்து பார்க்க ஒரு பார்த்திருப்பு மண்டபத்தை ஆக்கினார்.

பாடசாலையில் கல்வியையும் ஒழுக்கத்தையும் சிறப்படையச் செய்தார். ஜி. சி. ஈ. சாதாரணம் கலையிலும் விஞ்ஞானத்திலும் திறமையுடன் சித்தியெய்தினர். வர்த்தக வகுப்பும் சிறந்து வருகிறது. ஜி. சி. ஈ. உயர்தர வகுப்பை ஆரம்பித்து சென்ற இரண்டு ஆண்டுகள் பல்கலைக்கழகத்திற்கு மாணவரை அனுப்பினார். விவேகானந்தசபையாரால் நடத்தப்படும் சைவசமய பாடப் பரீட்சைகளில் ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கான மாணவர் சித்தியெய்தி வருவதுடன் பல முறைகளில் அகில இலங்கைப் பரிசையும் பெற்றனர். வடமாகாண ஆசிரியர் சங்க 8-ம் வகுப்புப் பரீட்சையில் 1968-ம் ஆண்டில் தூய கணிதத்திற்கான பரிசைப் பெற்றவர் எமது பாடசாலை மாணவரே.

புதிய மண்டபத்தின் மேல் மாடத்தில் சிறந்த நூல் நிலையமொன்றை அமைத்துள்ளார். அந்நூல் நிலையத்தை 1500க்கும் மேற்பட்ட சிறந்த நூல்கள் அழகு செய்கின்றன.

காலத்துக்குக் காலம் பாடசாலை நிகழ்ச்சிகளில் கலந்துகொண்ட உயர் கல்வி அதிகாரிகள் அவர் சேவை பற்றிக் குறிப்பிட்டிருப்பதாவது:

''குறிப்பாக அதிபரும் ஆசிரியர்களும் தத்தம் இப்பாடசாலையில் கல்வி பயிற்றல் எளிதாகவும் மகிழ்ச்சி நிறைந்ததாகவும் இருக்கிறது.'' — வி. துரைசிங்கம், வித்தியாதிபதி (21-7-62).

''இப்பாடசாலையின் பரிசளிப்பு விழாவில் முக்கிய விருந்தினராகக் கலந்து கொண்டேன். திரு. நடராசா கடமையே கருத்தாய் ஆற்றிவரும் தொண்டு போற்றற்குரியது. அன்னாருக்கு எனது வாழ்த்துக்கள்''. — கல்வி மாஅதிகாரி என் ஹெட்டியாராச்சி (18-9 66)

இவர் இப்பாடசாலைக்கு வருமுன் மூன்று வருடகாலம் கோப்பாய் மகாவித்தியாலயத்தில் அதிபராய் இருந்தார். அதற்கு முன் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் இரண்டு வருடமும், ஸ்ரான்லி மத்தியமகாவித்தியாலயத்தில் 21 வருடமும் உதவி ஆசிரியராய் இருந்து பணி புரிந்தார். அப்பாடசாலைகளிலும் அரிய பெரிய சாதனைகளை நிலைநாட்டியுள்ளார். இவரிடம் கல்வி கற்ற மாணவர் இன்று அரசாங்கத்தில் பெரிய பதவி வகிக்கிறார்கள். சிறந்த ஆசிரியராக இருக்கின்றனர். அவர்கள் வித்துவானைத் தமது குருவாக மதிப்பார்கள்.

தமிழிலும் ஆங்கிலத்திலும் பல உயர்தரப் பட்டங்களைப் பெற்றுள்ளார். பண்டிதர், வித்துவான், எம். ஏ; பி. ஓ. எல். என்பன இவர் பெற்ற பட்டங்கள். புன்னாலைக்கட்டுவன் வித்துவான் கணேசையரிடம் தமிழ், இலக்கண, இலக்கியங்களை வரன்முறையாகக் கற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தென்மராட்சிப் பகுதியிலுள்ள சகல பாடசாலைகளின் தலைமையாசிரியர்களும் அதிபர்களும் இவர்பால் பெருமதிப் புடையவர்கள். இங்கே நடைபெறும் நிகழ்ச்சிகளின் தலைமைப் பொறுப்பை எமது அதிபரிடம் கொடுப்பார்கள். அவரும் அதை ஏற்றுத் திறம்பட நடத்துவார்,

ஓய்வு நேரங்களில் கல்வித்துறை கூட்டுறவுத்துறை, சமயத்துறை, முதலிய துறைகளில குறிப்பிடத் தகுந்த சமூகப்பணியும்செய்துவருகின்றார்.

நிறைந்த கல்விப் புலமையினாலும், நல்ல பாடசாலைகளிற் பெற்ற அனுபவ முதிர்ச்சியினாலும், தளரா முயற்சியினாலும், இப் பாடசாலையில் உத்தமத் தொண்டாற்றிய அதிபர் மட்டுவில்

என்று பதில் அளிப்பதாயின் ''அவ்வித பாரபட்சமுள்ள 'டாம்பிளடி' கடவுள் எங்களுக்குத் தேவையில்லை'' என்று பகுத்தறிவு வாதிகள் கூறிவிடலாம்,

முன்பிறவிகளில் செய்த வினைகளே இன்று உலகில் காணும் வேற்றுமைகளுக்கு காரணம். இந்தப் பிறவியில் பிறருக்கு உபகாரமாக வாழ்ந்தால், இனி மறுபிறவியில் அது நல்ல பயனளிகக்கும் என்றால் அது பகுத்தறிவாளராலும் ஒப்புக் கொள்ளக்கூடியதாகும்.

0 0 0

வினைகளுக்குத் தக்க பயன் உண்டாயின், வினைகளே பயனைத் தருவதாயின் கடவுளாலும், பிரார்த்தனைகளாலும் என்ன பயன் என்ற கேள்வி எழுகின்றது.

கடவுள் எல்லாம் வல்லவர். நாம் முன்செய்த வினைகளைக் குறித்து வருந்தி, இனி அவ்விதம், செய்வதில்லை என்று பிரார்த்தனை செய்தால், கருணை ஈன கடவுள் அவற்றை மன்னிப்பதுடன், நமக்கு நன்மையானவற்றைக் கொடுக்கக் காத்திருக்கிறார்.

பிறரை நோவதில் பயனில்லை. அதனால்தான் ஒரு பொல்லாப்புமில்லைஎன்றும், எல்லாம் எப்போதோ முடிந்தகாரியமென்றும் யாழ்ப்பாண முனிவர் கூறியதின் கருத்து.

என்றிவ்வாறு மதுரை குருமகா சந்நிதானமவர்கள் பல கூட்டங்களிலும் விளக்கிவருகிறார்கள். இரு கண்ணாடிகளுக்கிடை லே உள்ள கம்பியை, வெளியிலுள்ள காந்த இரும்பு அசைத்து ஆட்டுவதைக்காட்டி, கண்ணுக்குத் தெரியாத இறைவன் சக்தி இவ்வுலகத்தையும், அண்டசராசரங்களையும் நடத்தி வருவதாயும், அதனிடம் நம்மைப் பூரணமாக ஒப்புவித்துவிட்டால், அது நமது எல்லாப் பிரச்னைகளையும் ஏற்று, நமக்கு ஒரு பளுவுமின்றி செய்வதாகவும், அதே காந்த இரும்பு உதாரணத்தைக காட்டி, பார்ப்போர் மனதில் பதி

மக்களின் மனத்தில் என்றும் நிலைபெற்றிருப்பர். அவர் பாடசாலைக்குச்செய்த சேவைகளினால் இதன் ஸ்தாபகர் கந்தர் அவர்களின் ஆத்மா சாந்தியடையும் என்பதில் சந்தேகமில்லை. இவர் சிறந்த உடனலமும், மனநலமும் பெற்று பல்லாண்டு வாழ எல்லாம் வல்ல சாந்தநாயகி சமேத சந்திர மௌலீசப் பெருமான் இன்னருள்புரிவானாக.

ச. கோபாலபிள்ளை

— —

## களவுபற்றி அடிக்கடி புகார்

உருத்திரபுரம், ஞாயிறு

உருத்திரபுரத்தில் கள்வர்களின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக புகார் கூறப்படுகிறது. இதனால் இரவு வேளைகளில் பெண்களும் வீடுகளில் தனிமையாக இருக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாம்.

யன்னல்களை வெட்டி வீட்டுக்குள் புகுந்து பொருட்களை களவாடுகிறார்களாம்.

அண்மையில் கோழி இரும்புக்கலப்பை தேங்காய் முதலியன களவுபோய் விட்டதாக பொலிசில அடிக்கடி புகார் செய்யப்பட்டுள்ளது.

— —

## பாடசாலை தரம் குறைக்கப்பட்டது

பருத்தித்துறை, ஞாயிறு

வடமராட்சி இந்துக்கல்லூரி 1970-ம் ஆண்டு தைமாதம் தொடக்கம் கனிஷ்ட பாடசாலையாகத் தரங்குறைக்கப்பட்டுள்ளது. 1970-ம் ஆண்டிலிருந்து இப்பாடசாலையில் 7-ம் வகுப்பு வரை மட்டுமே கல்விபோதிக்கப்படுமென்றும் மேல் வகுப்பு மாணவர் அயலிலுள்ள நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திற்கு மாற்றப்படுவரென்றும் தெரிகிறது.

— —

## பொய்முறைப்பாடு கொடுத்தாராம்

திருக்கோணமலை, ஞாயிறு

தம்மிடமிருந்த பணம் களவுபோய்விட்டதாக பொலிசில் புகார்செய்த ஒருவர், தாம் பொய்முறைப்பாடு கொடுத்ததாக தாமே பொலிசில் ஒப்புக்கொண்டுள்ளார்.

பெட்ரோல் நிலையமொன்றில் காசாளராகக்கடமையாற்றும் ஒருவர் திருக்கோணமலை பொலிஸ் நிலையத்தில் செய்துகொண்ட புகார் பொய்முறைப்பாடு என தெரிவித்ததைத்தொடர்ந்து, பொலிசார் இவர்மீது பொய்முறைப்பாடு கூறியதாக குற்றஞ்சாட்டி வழக்கு தாககல் செய்யவுள்ளனர். தனது கண்ணுக்குள் மிளகாய்த்தூளை வீசி பணம் சூறையாடப்பட்டதாக இவர் புகார்செய்திருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org